# திருமலைத்தீபம்

Thirumalaitheepam

திருகோணமலை மறைமாவட்டத்தின் மாதாந்த பத்திரிகை

சுடர் – 50
விலை ரூபாய் 20.00

தீபம்-50 | ஆனி இதழ் – 2018,
ஆரம்பம் 15 மாசி - 2013



திருமறைக்கல்வி நடுநிலையம்,
இல: 297 டொக்கியாட்வீதி, திருகோணமலை.

E-mail : catetcota@gmail.com
T.P : 026 2221022, 026 3202532


**ஞானமுள்ளவரது அறிவுரை வாழ்வளிக்கும் ஊற்றாகும்** (நீதி.மொ 13:14)

## ஆயரின் செய்தி



கிறிஸ்து இயேசுவில் அன்புமிக்க சகோதர சகோதரிகளே,

மரியன்னையின் வணக்கமாதம் எம் மறைமாவட்டத்தில் பல ஆன்மீக. திருவாழிபாட்டு செயல்பாடுகளோடு நிறைவுக்கு வந்தது. தனித்தும் குடும்பமாகவும் அன்பியக் குழுமங்களாகவும் பங்குச் சமூகமாகவும் நாம் நாளாந்தம் செபமாலை, பிரார்த்தனை, திருப்பலி அல்லது நற்கருணை ஆசீர் என பல செயல்பாடுகளில் ஈடுபட்டோம். இவற்றின் உச்சமாக நகரை அண்டிய பங்குகள் இணைந்து பாலையூற்று திருத்தலத்தை நோக்கி செபமாலைப் பவனி இடம்பெற்றது. இது மரியன்னைக்கு நாம் செலுத்தும் மரியாதையும் எமது விசுவாசத்தின் வெளிப்பாடுமாகும். அதனைத் தொடர்ந்து 27ம் திகதி பாலையூற்று புனித லூர்து அன்னை திருத்தலப் பெருவிழா சிறப்பாக நடைபெற்றது. இம்மாதம் முழுவதும் மரியன்னைக்குச் சிறப்பு நிகழ்ச்சிகளையும் வழிபாடுகளையும் ஒழுங்கு செய்து நடாத்திய அனைத்து குருக்களையும் துணை நின்ற துறுவறத்தவர். பொதுநிலையினர் அனைவரையும் நாம் பாராட்டுகின்றோம்.

இம்மாதம் பல திருவிழாக்கள் 13ம் திகதி புனித பதுவை அந்தோனியாரின் திருவிழா. உலகம் முழுவதும் இந்நாள் கத்தோலிக்கராலும் பிறமதத்தவராலும் கொண்டாடப்படுகின்றது. புனிதரின் அழைப்பு, அர்ப்பணம், பணி, புதுமைகள் என பலவற்றைப்பற்றி நாம் பேசலாம். இவர் காணாமற்போன பொருட்கள், மனிதர்கள். ஆன்மாக்களின் பாதுகாவலர் என்பதே பலரையும் அவர்பால் ஈர்க்கின்றது. தனது போதனையால் பாவிகளை மனம் திருப்பி நல்வாழ்விற்குக் கொண்டு வந்த புனித அந்தோனியாரின் நா இன்றும் அழியாமல் பதுவை பசிலிக்காவில் பாதுகாக்கப்படுகின்றது. புனிதரிடம் செபிப்போம் எமது வாழ்வும் வளம் பெறட்டும். இம்மாதும் ஆண்டவரின் திருவுடல் திருஇரத்தப் பெருவிழாவும் திரு இருதய ஆண்டவரின் பெருவிழாவும் மிகவும் சிறப்புவாய்ந்த பெருவிழாக்களாக அமைந்துள்ளன. ஆண்டவரின் திருவுடல் திருஇரத்தப் பெருவிழாவை முன்னிட்டு பங்குகளில் பிள்ளைகளுக்கு முதல்நன்மை எனும் அருட்சாதனம் வழங்கப்படுகின்றது, நற்கருணை ஆராதனை, சிறப்புப் பவனி. ஆசீர்வாதமும் ஒழுங்குசெய்யப்பட்டு நடாத்தப்படுகின்றன. திருஇருதய ஆண்டவரின் பெருவிழாவை முன்னிட்டு குருக்கள் 12ம் திகதி செவ்வாய்க்கிழமை சிறப்பு நற்கருணை ஆராதனையின்போது திருஇருதய ஆண்டவரிடம் தமது அர்ப்பணத்தைப் புதுப்பிப்பார்கள். எமது குருக்கள் தமது அழைத்தலில் நிலைத்திருக்கவும் ஆண்டவருக்கு எப்போதும் விசுவாசமாகப் பணிசெய்யவும் இவர்களுக்காக அன்றைய தினத்தில் செபிப்போம்.

யூலை மாதம் 1ம் திகதிமுதல் நடைமுறைக்கு வருவதற்கேற்ப எமது மறைமாவட்டத்தில் குருக்களுக்கான புதிய நியமனங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. பங்குத்தந்தை, நிறுவன இயக்குனர், ஆணைக்குழுக்களின் இயக்குனர், அப்போஸ்தலிக்க சபைகளின் ஆன்மீக வழிகாட்டிகள் என நான்கு வகையாக நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன. பொறுப்பேற்கும் குருவானவர் யார் என்பது முக்கியமல்ல. மாறாக, வரும் குருவிற்கு வேண்டிய ஒத்துழைப்பைக் கொடுத்து பணியை இலகுவாக்குவதே அவசியமானது. குருக்களின் பணி சிறக்க செபிப்போம், வாழ்த்துவோம், கரம் கொடுப்போம்.

இம்மாதம் ஆசீர் நிறைந்த மாதமாக அமைய வாழ்த்துகின்றேன்.

கிறிஸ்துவில்,
**பேரருட்திரு கிறிஸ்டியன் நோயல் இம்மானுவேல்**
திருகோணமலை மறைமாவட்ட ஆயர்

## இயேசுவோடு

### 12 மணி நேரம் விசேட நற்கருணை ஆராதனை

இடம் :
**புனித லூர்து அன்னை திருத்தலம், பாலையூற்று.**

காலம் :
**09 ஜுன் மாதம் 2018 (சனிக்கிழமை),**

நேரம் :
**மதியம் 12 மணி முதல்**
**இரவு 12 மணி வரை**



திருகோணமலை மறைமாவட்டத் திருச்சபையாக
**செபத்தில் இணைந்து கொண்டவர்களுக்கு நன்றிகள்**

## ஆஸ்கார் ரொமேரோ உட்பட 06 புதிய புனிதர்கள்



மே.19.2018, அருளாளர்கள் திருத்தந்தை ஆறாம் பவுல், ஆஸ்கார் ரொமெரோ, பிரான்செஸ்கோ ஸ்பினெல்லி, வின்சென்சோ ரொமானோ, மரிய கத்தரீனா காஸ்பர், இயேசுவின் தெரசின் நசரியா இஞ்ஞாசியார் ஆகிய ஆறு பேரையும். திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், வருகிற அக்டோபர் 14ம் தேதி புனிதர்களாக உயர்த்தப்படுவார்கள். மறைசாட்சியான சான் சால்வதோர் பேராயர் ஆஸ்கார் ரொமேரொ (Oscar Arnulfo Romero Galdameze) அவர்கள், 1980ம் ஆண்டு மார்ச் 24ம் தேதி, திருப்பலி நிறைவேற்றிக் கொண்டிருந்த போது சுட்டுக்கொல்லப்பட்டார். இவர், மத்திய அமெரிக்க நாடான எல் சால்வதோர் நாட்டின் Ciudad Barris இல், 1917ம் ஆண்டு ஆகஸ்ட் 15ம் தேதி பிறந்தவர்.

மறைமாவட்ட அருள்பணியாளரான, அருளாளர் பிரான்செஸ்கோ ஸ்பினெல்லி (Francesco Spinelli) அவர்கள், திருநற்கருணை ஆராதனை அருள்சகோதரிகள் சபையை நிறுவியர். அருளாளர் வின்சென்சோ ரொமோனோ (Vincenzo Romano – 1751-1831) அவர்கள், இத்தாலியின் நேப்பிள்ஸ் பகுதியைச் சேர்ந்த மறைமாவட்ட அருள்பணியாளர். அருளாளர் மரிய கத்தரீனா காஸ்பர் (Maria Caterina Kasper) அவர்கள், இயேசு கிறிஸ்துவின் ஏழைச் சகோதரிகள் சபையை நிறுவியவர்.

அருளாளர் இயேசுவின் தெரேசின் நசரியா இஞ்ஞாசியா (Nazaria Ignazia di Santa Teresa di Gesù) அவர்கள், திருஅவையின் திருச்சிலுவை மறைபோதக சபையைத் தோற்றுவித்தார்.

ஆதாரம் : வத்திக்கான் வானொலி
மே.19.2018

## பாலையூற்று திருத்தலத்தை நோக்கிய செபமாலைப்பேரணி














தொடர்ச்சி 02ம்பக்கத்தில்.....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சான்றோரின் ஒளி சுடர் வீசிப் பெருகும் ( நீதி.மொ 13:9 )**

## உங்களோடு பேசுகிறேன்..

[redacted]



சென்ற மாதம் - வைகாசி மாதம் - 'வணக்க மாதமாக' வலம் வந்து, எம் குடும்பங்களுக்கு இறைவனின் அளப்பரிய ஆசீர்வாதங்களை வாரி வழங்கியுள்ளது என்றால் அது மிகையல்ல. இந்த மாதத்தில் கிறிஸ்தவ விசுவாசிகளின் பக்தி முயற்சிகள், சிறப்பாக அன்னை மரியாவின் பேரில் மேற்கொள்ளப்படும் பக்தி முயற்சிகள் பரவலாக இடம்பெற்றதை நாம் அறிவோம். இதன் வழியான விண்ணக அரசியான அன்னை மரியாவுக்கு விசுவாசமும் அன்பும் நிறைந்த வணக்கத்தை அனைத்துலக கத்தோலிக்க மக்களும் மனமுவந்து அளிக்கின்றனர். எமது மறைமாவட்டத்திலும் சிறப்பாக, செபமாலைப் பேரணி வழியாக நாம் ஒன்றிணைந்து அன்னை மரியாவின் பேரில் எமக்குள்ள அன்பையும், நம்பிக்கையையும் வெளிப்படுத்தியுள்ளோம். இப்பேரணியில் கலந்து சிறப்பித்த அனைத்து பங்குகளைச் சேர்ந்த இறைமக்களையும் இப்பேரணியை தமது ஆலயங்களில் இருந்து ஆரம்பிக்க ஒழுங்குகளை மேற்கொண்டு, அவற்றை நெறிப்படுத்திய அனைத்து பங்குப் பேரவை உறுப்பினர்களையும், அருள்பணியாளர்களையும் பாராட்டுகின்றோம். "இம்மாதத்தில் இறைவனுடைய இரக்கத்தின் பலாபலன்களை அன்னை மரியாவின் அரியணையில் இருந்து தாராளமாகப் பெற்றுக்கொள்கின்றோம்" என்று திருத்தந்தை ஆறாம் சின்னப்பர் கூறியிருப்பதை நினைவுபடுத்துகின்றோம். (Paul Vi: Engyclical on the Month of May, no. 1)

ஆனி மாதம் எமது ஆன்மீக வாழ்வுக்கு இதமான மாதமாக மலர்ந்துள்ளது. இயேசுவும் அன்னை மரியாவும் 'எம்மேல் தமக்குள்ள தங்களது இதய அன்பை வெளிக்காட்டி அந்த அன்புக்கு பாத்திரமாகவும், அதே அன்பை பிரதிபலிக்கின்றவர்களாகவும் வாழ அன்போடு நம்மை அழைக்கும் மாதம். இயேசுவின் திரு இருதய விழாவும், மரியாவின் மாசற்ற இருதய விழாவும் எமது அன்பு வாழ்வில் புதுமை படைக்க வாழ்த்துகின்றோம்.

ஆனி மாதம் 13ம் திகதி உலகளாவிய ரீதியில் புனித அந்தோனியாரை நினைவுகூரும் சிறப்பு நாள். எம் நாட்டில் நகரங்கள்தோறும், கிராமங்கள்தோறும், மூலை முடுக்குகளில் எல்லாம், பரந்து காணப்படும் புனித அந்தோனியார் ஆலயங்களும், சிற்றாலயங்களும் விழாக்கோலம் பூணும் உன்னத மாதம். கோடி அற்புதர் புனித அந்தோனியார் இன்றும் இறைவனின் அருட்துணையால் புதுமைகள் செய்ய, சிறப்பாக இழந்துபோன பொருட்களை மட்டுமல்ல, இழந்துபோன சொந்தங்களின் உண்மை நிலை அறிய ஏக்கத்தோடும், கண்ணீர் கம்பலையோடும் தொடர்ந்து தவித்து நிற்கும் அனைத்து அன்பு உள்ளங்களின் சொல்லொண்ணாத் துயரங்களுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க தொடர்ந்தும் வேண்டுதல் செய்வோம்.

## குட்டிக்கதை

**Fr. NC**

வெளிநாட்டிலே இருந்த வந்திருந்த உறவுக்காரர்களை பார்க்க பலரும் வந்து போய்க்கொண்டிருந்தார்கள். ஒரு பொடியன் கொஞ்சம் முன்பாக வந்தவன். அவனும் அவர்களுக்கு உறவுதான். வெளிநாட்டிலிருந்து வந்தவர் தனது மனைவியிடம் சொன்னார் "என்ர போனை வச்சனான். வீட்டுக்குள்ள ஒருக்கா பார். கைமாறி வச்சிற்றன்". அவர் சொன்ன போது மனைவி உள்ளே போய் பார்த்துவிட்டுச் சொன்னார். " அங்க இல்ல. நல்லா தேடிப்பாருங்க", என்று. தேடி ஒரு இடமும் இல்லை. அவரது மகள் படிக்கின்ற பிள்ளை சொன்னாள், "பொறுங்க அப்பா நான் பாக்கிறன் என்டு சொல்லிகொண்டு, அப்பாவுடைய நம்பருக்கு டயல் செய்தாள்.

திடீரென்று ரிங்கிங் ரோன் போய்க்கொண்டிருந்தது. எங்கிருந்து அந்த சத்தம் வருகிறது? எல்லோருக்கும் ஆச்சரியம். ஏற்கனவே வந்திருந்த அந்த பொடியனின் காற்சட்டைப் பையிலிருந்து வந்து கொண்டிருந்தது. அவன் கண் கலங்கியபடி காற்சட்டைக்குள்ளிருந்த போனை எடுத்து வீட்டுக்காரரிடம் கொடுக்கிறான். "என்னை மன்னியுங்கள், ஏதோ செய்து போட்டன் மன்னியுங்க என்று சொல்லிக்கொண்டு அழுகிறான்.

வெளிநாட்டிலிருந்து வந்தவர் சொல்கிறார். "திருடுறது பாவம். இனிமேல் இப்படிச் செய்யாத சரியா" என்று சொல்லிக் கொண்டு மனைவியிடம் சொல்கிறார் "என்ர பெட்டியில இருக்கிற போனில ஒன்ட கொண்டு வா" என்று. மனைவி கொண்டு வந்து கொடுக்க அவர் அதை அந்தப் பொடியனிடம் கொடுக்க. அதை அவன் வாங்க மறுத்து அழுகிறான். அவர் பொடியனிடம் சொல்கிறார், நான் உனக்கு தாரன். இனி இப்பிடி எங்கயுமே செய்யாத சரியா". எப்படியோ அவனிடம் கொடுத்து விட்டார்.

"தவறு செய்வது மனித இயல்பு. மன்னிப்பது தெய்வீக இயல்பு என்பது வெளிப்படுகிறது அல்லவா"

## பாலையூற்று திருத்தலத்தை நோக்கிய செபமாலைப்பவனி....

திருகோணமலை மறைமாவட்டத்தின் திருத்தலமான புனித லூர்து அன்னையின் வருடாந்த திருவிழாவை முன்னிட்டு, திருநாளின் முதல் நாளான 26.05.2018 அன்று காலை 5.30 மணிக்கு திருமலை நகர்ப்புற பங்குகள் சேர்ந்து பாலையூற்ற திருத்தலத்தை நோக்கிய செபமாலைப்பேரணி மறைமாவட்ட நிகழ்வாக நடைபெற்றது.

இப்பேரணிக்கு எமது மறைமாவட்ட ஆயர் உட்பட பல அருட்தந்தையர்கள் கலந்து கொண்டனர். அத்தோடு நகர்ப்புறப் பங்குகளான பேராலயம், குவாடலூப்பே, உவர்மலை, செல்வநாயகபுரப் பங்கும் புற நகர்ப் பங்கான அலஸ்தோட்டம் இறைஇரக்கப் பங்கும் இப்பேரணியில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும். இப்பேரணியில் கனிசமான அளவிலான மக்கள் கலந்து கொண்டு அன்னையின் ஆசிரைப் பெற்றுக்கொண்டார்கள்.

இறுதியில் பொதுநிலை ஆளைக்குழுக்களின் இயக்குனர் அருட்பணி ஏ.றொகான் பேர்னாட் அவர்களின் தலைமையில் கூட்டுத்திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு, நிகழ்வுகள் யாவும் இனிதே நிறைவுற்றது.

"அன்னையின் ஆசிரும் அருளும் என்றும் அனைவருடனும் இருப்பதாக"

– திருமலைத்தீபம்

## குருத்துவ வாழ்வில் 18 ஆண்டுகள்

## 31.05.2018



பரலோக தந்தையின் வழிநடத்தலின்கீழ்
18 ஆசீர்வாத ஆண்டுகளாய்
பல பங்குத்தளங்களையும் பங்குமக்களையும்
வழிநடத்திய எம் பங்குத்தந்தையே
உம்மை வாழ்த்துகின்றோம்

தந்தையாய், நண்பனாய், சகோதரனாய்
தரணியில் உம்மைக் காண்கின்றோம்.
குவாடலுப்பே திருத்தலத்தில்
தங்கள் பாதம் தடம்பதித்த நாள்முதல்
நாம் கண்ட ஆன்மீக அபிவிருத்திகள் பல.

குவாடலூப்பே திருத்தல பங்குத்தந்தையாக
இரண்டு ஆண்டுகள் பணி புரிகையில்
தாங்கள் செய்த காரியங்களால்
திருத்தலத்தின் உள்ளேயும் வெளியேயும்
அழகு பார்த்து மகிழ்கிறோம்.

இறை அன்பை சுவைக்க
எம்மை வழிநடத்தும் தந்தையே
ஆவியானவரின் அருளுடனும் வளமுடனும்
தாங்கள் வாழவும்
உங்களின் பெற்றோரை இறைவன் ஆசீர்வதிக்கவும்
மனமார நாம் வாழ்த்துகின்றோம்.

பங்குமக்கள்,
புனித குவாடலூப்பே அன்னை திருத்தலம்
திருகோணமலை

## குவாடலூப்பே திருத்தலத்தில் வணக்க மாத இறுதி நிகழ்வும், பங்குத்தந்தையின் 18 வது குருத்துவ நிறைவு நிகழ்வும் ...

மரியன்னைக்கு புகழ்பாக்கள் பாடி அன்னைக்கு மரியாதை செலுத்தும் மாதமாக வைகாசி மாதம் திகழ்கின்றது. வழமையாக ஆலயங்களில் , வீடுகளில் செபமாலை தியானித்தாலும் , மாதா நமது வீட்டுக்கு வருகின்றாள் என சந்தோசப்படும் மாதமாக இம்மாதம் திகழ்கின்றது.

கடந்த வருடத்தைப் போல இம்முறையும் 06 வட்டாரங்களில் வைகாசி மாதம் முழுவதும் செபமாலை தியானிக்கப்பட்டது. வைகாசி மாதம் 01ம் திகதி காலைத் திருப்பலியில் ஆசிர்வதிக்கப்பட்ட மரியன்னையின் சொரூபங்கள் வட்டார ரீதியாக மரியாயின்சேனை உறுப்பினர்களிடமும் வட்டாரத் தலைவர்களிடமும் கையளிக்கப்பட்டது. ஒரு குறிப்பிட்ட ஒழுங்கின்படி ஒவ்வொரு வட்டாரத்திலும் ஒவ்வொரு வீடாக மரியன்னை இறைமக்களை சந்தித்தாள்.

இதன் இறுதி நாளான 31ம் திகதி மாலை 4.30 மணிக்கு வட்டாரத்தலைவர்களும் மரியாயின்சேனை உறுப்பினர்களும் வட்டார இறைமக்களுடன் இணைந்து தங்களிடம் கையளிக்கப்பட்ட மரியன்னையின் சொரூபங்களை பவனியாக ஆலயத்திற்கு கொண்டு வந்தனர். இவ்வருடம் குவாடலூப்பே திருத்தல வெளியரங்கில் , ஆலயத்தை சுற்றி செபமாலை தியானிக்கப்பட்டது. இதில் வட்டாரங்கள் தமக்கென ஒதுக்கப்பட்ட இடங்களில் மரியன்னையின் அழகிய வடிவங்களை காட்சிப்படுத்தினர். இவ்விடங்களில் காரணிக்கம் சொல்லப்பட்டதுடன் , விசேடமாக வடிவமைக்கப்பட்ட பெரிய செபமாலையும் பவனியின்போது இறைமக்களால் கொண்டு வரப்பட்டது. இறுதியில் 04 குருக்களின் கூட்டுத் திருப்பலியுடன் இந்நிகழ்வுகள் நிறைவுற்றன. அன்று இரவு 7.30 மணிக்கு ஆலய திறந்தவெளி அரங்கில் பங்குத்தந்தை அருட்பணி.B.ஜெயபாலன் அ.ம.தி அடிகளாரின் 18வது குருத்துவ நிறைவு நிகழ்வு கோலாகலமாக கொண்டாப்பட்டதுடன் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

தகவல்: ச.அன்ரனிதாஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர் - 14

# நல்லாசிரியர்: ஆளுமையும் ஆன்மீகமும்

அருட்தந்தை எஸ். அன்ரனி பொன்சியன் அமதி (BTh,B.A. (Hons), PGDE, MEd)

## செய்நன்றி மனப்பான்மை



எதைப்பற்றியாவது குளறிக்கொண்டிருப்பது எமது வழக்கமான பழக்கமாக இருக்கலாம். அந்த வகையில் ஊதியம் போதாதெனவும், மாணவர்களின் ஒழுக்கம் மோசமானதெனவும், வகுப்பறை இடைவெளி போதாதெனவும், தனது சக ஆசிரியர்களுக்கு இருப்பது போல வசதியான வீடு, நல்ல வாகனம் இல்லையெனவும் தனக்குத்தேவையான கற்றல் சாதனங்களைப் பெற முடியவில்லை எனவும் அதிபர் சக ஆசிரியர்களின் ஒத்துழைப்பு போதாதெனவும் பெற்றோர், பிள்ளைகள் மட்டில் கவனம் எடுப்பதில்லை எனவும் பாடவேளை அதிகம் எனவும் பயிற்சிக் கொப்பிகளை பிழை திருத்தம் செய்ய அதிக நேரம் செலவழிகிறது எனவும்..... இன்னும் பல முறைப்பாடுகளை அடுக்கிக்கொண்டே போகும் ஆசிரிய நண்பர்கள் பலர் உள்ளனர்.

ஆசிரிய வட்டத்துக்குள் இருந்து பயணிக்கும் போது இவையெல்லாம் விளங்கிக்கொள்ளக் கூடியவைகளே. ஏதோ ஒரு வகையில் ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் எவரேனும் இவ்வாறு முறையிடுவது இயல்பானதே. ஆனால் மேற்கூறப்பட்ட முறையீடுகளை ஆசிரியர் முன்வைப்பது சரியா அல்லது நியாயமானதா அல்ல புத்திசாலித்தனமானதா?

இவ்வாறு முறையிடும் ஆசிரியர் முதலில் எவ்வாறானவராக இருப்பார் என ஊகிக்கலாம். பழகுவதற்கு இவர் இதமானவராக இருக்கமாட்டார். சிறப்பாக ஒன்றாக வாழ்வதற்குரிய கணவனாகவோ மனைவியாகவோ இருக்கமாட்டார். மிக மிக அரிதாகவே மகிழ்ச்சியாக காணப்படுவார். எவ்வளவு தான் இருந்தாலும் இன்னும் வேண்டுமென்ற மனப்பான்மையுடையவர். நிம்மதியான தூக்கத்தைத் தொலைத்தவராகக் காணப்படுவார்.

இவ்வாறான முறையிடுபவர்களாகவும். மனநிறைவற்றுக் காணப்படும் ஆசிரியர்கள் எவ்வாறு நேர்மறையான மனப்பான்மையை வளர்த்து ஆசிரியப்பணியில் திருப்தியடைய முடியும் என்பதை நோக்குவோம். நமக்குக் கிடைக்கும் ஊதியம் போதாதென கருதுபவர்கள் நம்மைவிட குறைவான ஊதியத்தில் பெரிய குடும்பத்தை திருப்திகரமாக நடத்துபவர்களை நினைவில் கொண்டு வரலாம். நம்மை விட இருமடங்கு ஊதியம் பெறும் வங்கியில் பணிபுரியும் நண்பரொருவர் 12 மணித்தியாலங்கள் வேலை புரிபவராகவும் ஆசிரியரை விட மிகக்குறைந்த லீவு பெறுபவராகவும் இருப்பார். மாணவர்கள் குழப்பக்காரர்களாகவும் சண்டித்தனமுடையவர்களாகவும் இருக்கலாம். ஆனால் இடுப்பிலே கத்தியைச் சொருகிக் கொண்டு சிலர் செல்வது போல, மிரட்டுபவர்களாக இருக்கமாட்டார்கள். ஆசிரியரின் வீடு சிறிதாகவும் போதிய வசதிகள் இல்லாமலும் இருக்கலாம். ஆனால் வீடு கட்டிக் கொள்ள சிறுதுண்டு நிலமின்றி வாடகை வீட்டில் உள்ளவர்களை நினைவிற்கொள்ள முடியும். இருக்கும் இடத்தில் இருப்பதே எவ்வளவு ஆசீர்வாதமென்பதை எண்ணி இறைவனுக்கு நன்றி கூறவேண்டும். ஆசிரியத்தொழில் கூட இல்லாமல் அல்லலப்படும் ஆயிரக்கணக்கானவர்களை எண்ணித் திருப்திப்படலாம் அல்லவா? பிரபல்யமான எழுத்தாளர் G.K.Chesterton, "When you have a headache, thank god for giving you a head to ache" எனக் கூறுகின்றார். அதாவது தலையிடி வரும்போது முதலிலே (ஆரோக்கியமான) தலையைத்தந்த இறைவனுக்கு நன்றி கூறுங்கள் என்கிறார். காலணிகள் இல்லையென அழுதுகொண்டிருந்த சிறுவனொருவன் ஒற்றைக்காலோடு நொண்டியபடி தெருவில் செல்லும் சிறுவனைப் பார்த்து ஆறுதலடைந்தானாம். ஆசிரியர் பலரின் நிலை இவ்வாறானதே.

கற்பித்தல் உபகரணங்கள் போதாது. வகுப்பறை வசதியற்றுக் காணப்படுகிறது என முறையிடுபவர்கள் எந்தவித கற்பித்தல் உபகரணங்களுமின்றி மரத்தின்கீழ் பாடம் நடத்தும் ஆசிரியர்களை எண்ணிப்பார்த்து ஆறுதலடைய வேண்டியவர்களாய் உள்ளனர். ஆசிரியப்பணியிலே நேர் மனப்பான்மை இருக்குமானால் கற்பித்தல் பணியிலுள்ள சுமைகளையும் பாடசாலையிலுள்ள குறைபாடுகளையும் நல்மனதோடு ஏற்றுக்கொண்டு பணியாற்றக் கூடியதாக இருக்கும்.

குடும்பத்தில் செலவிடும் நேரத்தையும் சொந்த சுகங்களையும் தியாகம் செய்து பாட ஆயத்தங்களிலும், பயிற்சிக்கொப்பி திருத்துவதிலும் ஈடுபடும் ஆசிரியர், இவையெல்லாம் மாணவரின் முன்னேற்றத்திற்காக தான் செய்யும் கட்டாயக் கடமையாகக் கருதிக் கொள்வார். அத்தோடு மாணவச் செல்வங்களின் எதிர்காலத்தைத் தம்மிடம் ஒப்படைத்த நல்லாசானாகிய இறைவனுக்கு செய்யும் பணியாகவும் கருதிக்கொள்வார்.

நமக்குக் கிடைத்திருக்கும் எல்லாச் செல்வங்களுக்காக இறைவனுக்கு நன்றியுடையவராகவும் இல்லாதவற்றிற்காக முறையிடாத பண்புள்ள ஆசிரியர் நிறைவுள்ளவராகவும், மகிழ்ச்சியுள்ளவராகவும் வெற்றிகரமான பெறுபேறுகளைக் கொடுப்பவராகவும் விளங்குவார். பின்வரும் செபம் ஆசிரியருக்கு பயனுள்ளதாக அமையும்.

"O Lord, who gives me so much,
give one thing more - a greatful heart;
not thankful only when it please me,
as though thy blessings had a off days
but such a heart
whose every pulse is

## மறைமாவட்ட விவிலிய பேச்சுப்போட்டி முடிவுகள் -2018

### தமிழ் மொழி

**கீழ்பிரிவு**

1ம் இடம் செல்வி. வேணுஜா சுமித்ரா - இறை இரக்கத் திருத்தலம், அலஸ்தோட்டப்பங்கு
2ம் இடம் செல்வி. கிரிசாளினி அன்பழகன் - திரு இருதய ஆண்டவர் ஆலயம். இருதயபுரப்பங்கு
3ம் இடம் செல்வி. ஜதுர்சியா சிவமதன் - குவாடலூப்பே அன்னை திருத்தலப் பங்கு, திருகோணமலை

**மேல்பிரிவு**

1ம் இடம் செல்வி. கம்சாளினி சிறிஸ்கந்தராசா - திரு இருதய ஆண்டவர் ஆலயம். இருதயபுரப்பங்கு
2ம் இடம் செல்வன். நோயல் டானியேல் திஹாஷன் - குழந்தை இயேசு ஆலயம், உவர்மலைப்பங்கு
3ம் இடம் செல்வி. சுகிர்தனா சந்திரசேகரம் - குவாடலூப்பே அன்னை திருத்தலப் பங்கு, திருகோணமலை



### சிங்கள மொழி

**கீழ்பிரிவு**

1ம் இடம் செல்வன். யொஹான் ஏனஸ்ட் கீத் - புனித அந்தோனியார் ஆலயம், சீனக்குடாப்பங்கு, (ஆன்டாங்குளம்)
2ம் இடம் செல்வி. அமாஷி உஷாரா விஜேமன்ன - திரு இருதய ஆண்டவர் ஆலயம், (கந்தளாய்ப்பங்கு)
3ம் இடம் செல்வி. பீ. நெத்மி நொவாத்யா - குவாடலூப்பே அன்னை திருத்தலப் பங்கு, திருகோணமலை

**மேல்பிரிவு**

1ம் இடம் செல்வன். நிஷான் - புனித அந்தோனியார் ஆலயம், சீனக்குடாப்பங்கு
2ம் இடம் செல்வி. ஆர்.எம். நாளினி நிமேஷா - புனித அந்தோனியார் ஆலயம், சீனக்குடாப்பங்கு, ஆன்டாங்குளம்


### ஆங்கில மொழி

**கீழ்பிரிவு**

1ம் இடம் செல்வி.டின்ஷியா நயோமி ரூப் - புனித லூர்து அன்னை ஆலயம், பாலையூற்றுப்பங்கு
2ம் இடம் செல்வி. ஆன் அகசியா ராகல் - குழந்தை இயேசு ஆலயம், உவர்மலைப்பங்கு
3ம் இடம் செல்வி. நிரேஷா காமல் றெஜினோல்ட் பீற்றர் - புனித மரியாள் பேராலயப்பங்கு

**மேல்பிரிவு**

1ம் இடம் செல்வி. ஜியோடியா ருக்ஷன் எமில்டன் - புனித மரியாள் பேராலயப்பங்கு
2ம் இடம் செல்வி. ஆன் மியூரிக்கா செந்தில்நாதன் - புனித அந்தோனியார் ஆலயம், மூதூர் பங்கு
3ம் இடம் செல்வி. பிரதிக்ஷா ஜெயரூபன் - திரு இருதய ஆண்டவர் ஆலயம், இருதயபுரப்பங்கு



**பங்கு பற்றிய அனைவருக்கும் பாராட்டுக்களும் வாழ்த்துக்களும்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# குடும்பத்தில் பொறுப்புணர்வு
## பிள்ளைகள் மற்றும் திருமணத்தின் மட்டில் நெறிமுறைகளின் பூரணத்துவம்

அருட். சகோ. எமர்சன் ராகல்
மெய்யியல் பீடம்,
தேசிய குருமடம்

சென்ற இதழ் தொடர்ச்சி...

பொறுப்புணர்வு போல விரிதிறனும் ஒருமனிதனுக்கு இயற்கையாக கிடைப்பதொன்றல்ல. அனுபவக்கல்வி மற்றும் ஞானமுள்ள தெரிவுகளின் மூலம் விரிதிறன் எனும் பண்பை நாம் சிறுவயதிலிருந்து வளர்த்துக் கொள்கிறோம். மோசமான அல்லது இன்பகரமான அனுபவங்களுக்குப் பின் நாம் மேற்கொள்கின்ற தெரிவுகளே எம் எதிர்கால வாழ்க்கைக்கு வித்திடுவதாக அமைகின்றது. தெரிவுகளை மேற்கொள்ளும் போது பகுத்தறிவுடனும் இறை ஞானத்துடனும் மேற்கொள்வது அவசியமானதாகும். தெரிவுகளில் உள்ள அனுகூலம் பிரதிகூலம் என்பவற்றை ஆலோசித்து சுயசிந்தனையுடன் முடிவெடுக்க வேண்டும். இவ்வகையாக இருப்பின் தாம்பத்திய உறவும் குடும்ப வாழ்வும் ஒளிமயமானதாக விளங்கும்.


### III. தொடர்பகத்தன்மை

தொடர்பகத்தன்மை எனும்போது குடும்ப அங்கத்தவர்களுக்கிடையிலான தொடர்பு மற்றும் குடும்பத்திற்கும் சமூகத்திற்கும் இடையிலான தொடர்பு என இருவகையாக நோக்கலாம். தொடர்பகத்தன்மையில் உரையாடல், புரிந்துணர்வு போன்ற மிக முக்கிய விழுமிய பண்புகளை உள்ளடக்குகின்றன. குடும்ப அங்கத்தவர்களுக்கிடையிலான தொடர்பை ஆராய்கையில் நாம் முன்பே ஆராய்ந்தது போல அன்பை அடித்தளமாகக் கொண்ட உரையாடலும், மனித உரிமைகளுக்கு மதிப்பளிக்கும் புரிந்துணர்வும் குடும்ப அங்கத்தவர்களுக்கிடையிலே திகழ வேண்டும். கணவன் மற்றும் மனைவி, பெற்றோர் மற்றும் பிள்ளைகளுக்கிடையிலான உறவு எந்தளவிற்கு ஆரோக்கியமானதாக உள்ளதோ அந்த அளவிற்கு குடும்பத்தில் அமைதியும், மகிழ்ச்சியும் நிறைந்திருக்கும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

குடும்பம் மற்றும் சமூகத்திற்கு இடையிலான தொடர்பை நோக்குகையில் குடும்பத்தின் அங்கத்தவர்கள் சாதாரணமாக வாழ்வை நடாத்திச் செல்ல வேண்டுமெனில் சமூகத்துடனான தொடர்பும் பயன்பெறுவதும், பயனளிப்பதுமான செயலிலும் ஈடுபட வேண்டும். அமெரிக்க இறையியலாளர் டேவிட் மெக் கார்த்தி (David Mc Carthy), இத்தொடர்பு பற்றி கூறுகையில் சமூக நிலையில் இருந்து குடும்பத்தை நோக்கும் போது, குடும்பம் ஒரு தனிமையான தீவு அல்ல எனவும் சமூகத்துடன் ஒன்றித்திருப்பது குடும்பத்தில் சமூகவியல் பண்பு எனவும் திருச்சபையை கட்டியெழுப்புவதற்கு ஒரு உந்து சக்தியாக சமூகத்தில் குடும்பம் விளங்குகிறது எனவும் கூறியுள்ளார். எனவே இதனடிப்படையில் குடும்பங்கள் பலவற்றை இணைத்துள்ள சங்கிலியாக காணப்படும் சமூகத்துடன் ஒன்றித்திருப்பது ஒவ்வொரு குடும்பத்தினதும் அடிப்படை தேவையாகும்....

தொடரும்..........................

# பேராயர் ஆஸ்கார் ரொமேரோ



### 06. கவிதையும் ரொமேரோவும்

குருமடத்தில் படிக்கும் போது ரொமேரோ கவிதை ஒன்று எழுதினார்.

' மனத்துயரடைவோருக்கு
உமது வார்த்தை மன்னிப்பும் சாந்தமுமாம்.
உமது வார்த்தை தூய பயிற்றுவித்தல் மற்றும் கற்பித்தல்.
உமது வார்த்தை முடிவில்லா இதயத்தின் அறிவுரை.
உமது வார்த்தை நம்பிக்கையின் குரல்.
உமது வார்த்தை சுட்டெரிக்கும் தீ.
உமது வார்த்தை வியத்தகு உண்மையும், வழியும் வாழ்வின் முழுமையும்.
உமது ஆலயம் போர்க்களம்.
உமது இரட்சிக்கும் சிலுவை உலகை வெல்லும் ஓங்கிய வாள்.
உமது சிலுவைப் பாதை வாழ்வின் பலம்'.

இக்கவிதை ரொமேரோவின் ஆழ்ந்த சிந்தனைகளையும் இறை நம்பிக்கையையும் நமக்கு உணர்த்துகிறது.

### 07. சிலுவையும் ரொமேரோவும்

1940இல் உரோமில் இருந்த இலத்தீன் அமெரிக்கக் கல்லூரி பத்திரிகையில் அவர் எழுதும்போது அவரது குருத்துவத்தையும் சிலுவையையும் ஒப்பிட்டே எழுதினார்.

தன் இளம் வயதில் அவர் படித்துக் கொண்டிருந்த போது எழுதிய கவிதையும் சிலுவையைப் பற்றித் தியானித்ததும் நினைவு கூரத்தக்கவை. அவரது கவிதையும் கட்டுரையும் எசாயா இறைவாக்கினரின் 'துன்புறும் ஊழியன்' போன்று ஓர் இலக்கு நோக்கிய சிலுவைப்பாடுகளாகவே இருந்ததாக நம்மால் புரிந்து கொள்ள முடியும்.

குருவானவரின் பாரம்பரிய சொத்து சிலுவைதான். சாகும் தருவாயில் படுக்கையில் இருக்கும் ஒருவரை சிலுவையோடு அணுகுவது மன்னிப்பையும் அமைதியையும் தரும். விண்ணுலகின் திறவுகோல் இந்த சிலுவைதான். சிலுவையில் தொங்கி நம்மை விடுவித்த இயேசுவின் உயிர்ப்பிலும் வாழ்விலும் பங்கு கொள்வதன்

### 8. இன்னாசியாரும் ரொமேரோவும்

உரோமையில் இருக்கும்போது ரொமேரோ இயேசு சபை பேராசிரியர்களோடு நெருக்கமானார்.

இயேசு சபையைத் தோற்றுவித்த இக்னேசியஸ் லொயோலாவின் ஆன்மீகப் பயிற்சிகளை தெரிந்து வைத்திருந்தார்.

ஒருமுறை ரொமேரோ இந்த இன்னசியார் தியானத்திற்குச் சென்றார். அவர்கள் கற்றுக்கொடுத்த ஆன்மீகப் பயிற்சிகளை பின்பற்றவும் செய்தார். இந்த ஆன்மீகம் அவருக்குப் பிடித்த ஒன்றாக இருந்தது.

தனது குருத்துவ வாழ்விலும் பின்பு ஆயரானபோதும் இந்த ஆன்மீகம் அவருக்குத் துணை நின்றது.

### 9. அருட்பணியாளர் ரொமேரோ

ரொமேரோ 1942ஆம் ஆண்டு ஏப்ரல் 4ஆம் நாள் உரோமையில் அருட்பணியாளராகத் திருநிலைப்படுத்தப்பட்டார்.

ஆனால் இரண்டாம் உலகப்போர் சூழலின் காரணமாக பயணங்கள் பல ரத்து செய்யப்பட்டதால் இவரது குடும்பத்தினர் இவரின் குருப்பட்டத் திருப்பலியில் கலந்து கொள்ள இயலவில்லை.

உரோமையில் ஒலத்தல் இறையியலில் முனைவர் பட்டம் படிக்க விரும்பினாலும் 1943இல் எல் சால்வதோரில் குருக்கள் குறைவாக இருந்ததால் திருப்பி அழைக்கப்பட்டார்.

கிராமப்புறப் பங்கான அனமோரோசில் குருவாக சிறப்பாக பணியாற்றினார். கிராமப்புறப் பங்கில் அதிக நாள் பணியாற்றவில்லை என்றாலும் தான் கிராமத்துப் பங்கில் இருக்கிறேன் என்று ஒருநாளும் வருந்தவில்லை.

மிகுந்த முகமலர்ச்சியோடு தனது நியமனத்தை ஏற்று பணிபுரிந்தார். மேலும் சான் பிரான்சிஸ்கோ மற்றும் சான் மைக்கிள் பங்குகளில் பணியாற்றினார்.

### 10. பாரியோசில் ரொமேரோ

இரண்டாம் உலகப்போர் உச்சநிலையில் இருந்த போது இலத்தின் அமெரிக்க மாணவர்களுக்கு நாடு திரும்பும் வாய்ப்பு தரப்பட்டது.

ரொமேரோ உரோமையின் கிரகோரியன் கல்லூரியிலேயே தங்கியிருந்தார்.

இனி அவரது வேர்கள் திருச்சபையில் தான், குருத்துவத்தில் தான் என்பதை உணர்ந்திருந்தார். 1943ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் உரோமையிலிருந்து நாடு திரும்புவதிலும் சில சிரமங்கள் இருந்தன. 1943ஆம் ஆண்டு கிறிஸ்து பிறப்புக் காலத்தில் நாடு வந்து சேர்ந்தார். சான் மிகுவேல் பிளாசாவில் அவருக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

அவர் பிறந்து வளர்ந்த பாரியோசுக்குச் சென்று நன்றித் திருப்பலி நிறைவேற்றினார். இனி ஆண்டவரின் திராட்சைத் தோட்டத்தில் பணி செய்ய தயாரானார்.

### 11. வானொலி ரொமேரோ

ரொமேரோவின் திறமையும் அர்ப்பணமும் பெரும் பொறுப்புக்களும் அவரை அழைத்தது. எனவே அவர் சான் சால்வதோர் கூட்டுக் குருமட அதிபராகவும், சான் மிகுவேல் மறைமாவட்டப் பேராலயப் பங்குத்தந்தையாகவும், எல் சால்வதோர் ஆயர் பேரவை செயலாளராகவும் 23 ஆண்டுகள் பணிசெய்தார்.

மறைபரப்புப் பணியில் வானொலியின் சக்தியை உணர்ந்தவராய் ஆலயத்தில் வரவேற்கப்படாத தொழிலாளர்கள் கேட்கும் வண்ணம் ஐந்து வானொலி நிலையங்களில் இவரது ஞாயிறு மறையுரைகளை ஒலிபரப்பச் செய்தார்.

இந்த மின் உபகரணமான வானொலி அவரது பிரசங்க மேடையானது. மறைமாவட்ட பத்திரிகை 'ஒரியண்டேசன்' ஆசிரியராகவும் செயல்பட்டார். சிறிது தயக்க சுபாவம் கொண்ட அவருக்கு இத்தகைய நிர்வாகப் பணிகள் நன்றாக ஒத்துப்போயின. ஆகவே மக்களோடு உறவு பாராட்டும் திறன் தனக்கு இல்லையோ என்ற அச்சம் அவருக்கே எழுந்தது.

### 12. பன்முக ரொமேரோ

ரொமேரோ பங்கிற்கு அனுப்பப்பட்டபோது அவருக்கு 27 வயது தான். ஆனால் குறுகிய காலத்தில் சான் மிகுவேல் மறைமாவட்டச் செயலாளராக நியமனம் செய்யப்பட்டார்.

அவரது கீழ்ப்படிதலை சோதிக்க ஆயர் அவரை பங்கிற்கு அனுப்பினாரா? அல்லது அவரது பணி மறைமாவட்ட அலுவலகத்திற்கு தேவை என திருப்பி அழைத்தாரா? என்பது தெரியவில்லை. ஆனால் அடுத்த 23 ஆண்டுகளுக்கு இப்பணியைச் செய்தார். மேலும் சிலவற்றை செய்தார். பேராலய பங்குத்தந்தையாகவும் இருந்தார். அவரது மறையுரை சக்தி வாய்ந்ததாக இருந்தது.

வானொலி நிலையங்களில் இவரது மறையுரை ஒலிபரப்பப்பட்டது. பேராலய புதுப்பித்தல் பணியை மேற்கொண்டு நிறைவடையச் செய்தார். அன்னை மரியை அமைதியின் அன்னையாக பாவித்தார். மரியாயின் சேனையை வழிநடத்தினார். குடி மாற்றும் முயற்சியில் ஈடுபட்டார். செபமாலைக்கு முக்கியத்துவம் கொடுத்தார். நற்கருணை ஆராதனையை வளர்த்தெடுத்தார்.

மறைமாவட்ட கத்தோலிக்க பத்திரிகைத் தொகுப்பாளர், குருமட அதிபர், ஒப்புரவு அளிப்பவர் என பல பொறுப்புக்களை ஏற்றார். ஆயர் இல்லாத நேரத்தில் அவருடைய சில பொறுப்புக்களையும் செய்தார். இவ்வாறு பிற்காலத்தில் ஆயராகத் தன்னை தயார்ப்படுத்திக் கொண்டார்.

தொடரும்..........................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அன்பின் மகிழ்வு

அருட்தந்தை. ஏ.ஏ. நவரெட்ணம்
முதுநிலை விரிவுரையாளர்,
கிழக்குப் பல்கலைக்கழகம்,
இலங்கை.

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் திருத்தூது ஊக்கவுரை

## அலகு — 6: சில மேய்ப்புப்பணி நோக்குகள்

இல. 199 – இன்றைய குடும்பங்கள் எதிர்கொள்ளும் பலதரப்பட்ட சவால்களை எடுத்துரைக்கக்கூடிய புதிய மேய்ப்புப்பணி வழிமுறைகளை உருவாக்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென ஆயர்கள் பேரவை வேண்டுகோள் விடுத்துள்ளது.

இல. 200 – திருமண அருளடையாளத்தின் வாயிலாக குடும்பங்கள் இல்லத் திருச்சபைகளாக மாறுகின்றன. இத்தகைய இல்லத் திருச்சபைகள் நற்செய்தியின் கட்புலனாகும் சாயலாகத் திகழ திருச்சபையானது பல்வேறு விதங்களில் முயற்சிகள் செய்து உதவி புரிய வேண்டும்.

இல. 201 – நற்செய்தி அறிவிப்பானது இன்றைய மக்கள் எதிர்கொள்ளும் நாளாந்த நடைமுறை விடயங்களைக் (issues) குறித்து பேசவேண்டும். அத்துடன் உண்மை அன்பினைக் கொணரக்கூடிய கிறிஸ்தவ விழுமியங்களை ஆதரிக்க வேண்டும்.

இல. 202 – பங்குத் திருச்சபையே குடும்பங்களின் குடும்பமாகும். அங்குதான் குடும்பங்களுக்கான பெரும்பாலான பணிகள் ஆற்றப்படுகின்றன. எனவே பங்குப் பணியிலுள்ள குறைபாடுகள் எடுத்துரைக்கப்பட வேண்டும்.

இல. 203 – குருமட மாணவர்கள் மிகுந்த செயற்திறன் மிக்கவர்களாக உருவாக்கப்பட வேண்டும், அப்போதுதான் வரும்காலத்தில் அவர்கள் குருக்களாக செயற்திறன் மிக்கவர்களாக குடும்பங்களுக்கு பணியாற்ற முடியும்.

இல. 204 – திருப்பொழிவு பெற்ற குருக்களின் குடும்பங்களுக்கான பணியில் உதவிடவும், அதனை நிறைவு செய்யவும் பொதுநிலை இறைமக்கள் அப்பணியில் உள்வாங்கப்பட்டு, உருவாக்கப்பட வேண்டும்.

இல. 205 – திருமண பந்தத்தில் இணைக்கப்படவுள்ள மணமக்களுக்கான உருவாக்கமும், கல்வியும் உறுதியான ஒரு குடும்பத்தை அவர்களது திருமணத்தின் ஆரம்பத்திலிருந்தே கட்டியெழுப்பிட உதவிடும்.

இல. 206 – திருமண ஆயத்த நிகழ்ச்சித் திட்டத்தில் திருமணத் தம்பதியினர் எதிர்கொள்ளவுள்ள அனைத்து சவால்களையும் எடுத்துரைக்க முழுப் பங்கினது செயற்பாடும் உள்வாங்கப்பட வேண்டும்.

இல. 207 – முழுச் சமூகத்தின் செயற்பாட்டினூடாக நிகழும் உருவாக்கத்தினால், முழுச்சமூகமும் உறுதியடைகின்றது, அத்துடன் வழங்கப்பட்ட உருவாக்கல் பயிற்சியினூடாக திருமணத்தில் இணைக்கப்படவுள்ள மணமக்கள் வெறுமனே அறிவுசார் உருவாக்கத்தில் மட்டும் உள்வாங்கப்படாமல் வேறுபல வழிகளிலும் பயன் பெறுவர்.

இல. 208 – விருத்தியடைந்த பங்கு வாழ்வினூடாக திருமணத்திற்கு வழங்கப்படுகின்ற உடனடி ஆயத்தமானது அவர்களின் உருவாக்கத்திற்கு பேருதவியாகும்.

இல. 209 – மணமக்கள் ஒருவர் மற்றவர்மீது கொள்கின்ற விருப்பம் திருமணத்திற்கு போதுமானதல்ல, அவர்களின் உறவுநிலை அதைவிட அழமானதாகச் செல்ல வேண்டும்.

இல. 210 – மணமக்கள் தங்கள் ஒருவர் ஒருவருக்கிடையில் காணப்படும் குறைபாடுகளை இனங்காண வேண்டும், அத்துடன் அக்குறைபாடுகள் தங்களது திருமணத்திற்கு பெரும் தடையினை உண்டாக்குமா என்பதனை அறிய முற்பட வேண்டும்.

இல. 211 – திருமண வார்த்தைப்பாடு மணமக்களின் உருவாக்கத்தின் முடிவு அல்ல மாறாக, திருச்சபையின் பலதரப்பட்ட வளங்கள் அவர்களுக்கு அறிமுகம் செய்யப்படுவதுடன், அவர்களது திருமணத்திற்கு பின்னரான தொடர் உருவாக்கத்திற்கும் அவை உதவி புரியக்கூடியனவாகவும் இருக்க வேண்டும்.

இல. 212 – திருமணம் குறித்ததான தற்கால ஆடம்பர செலவீனங்கள் உண்மையான திருமண கொண்டாட்டத்திற்கு ஆபத்தாக அமைந்துள்ளது. எனவே மணமக்களும், அவர்களின் பங்குத் திருச்சபையும் ஆடம்பரத்தைத் தவிர்த்து மணமக்களை இணைக்கும் அன்பின் கொண்டாட்டத்தை ஆதரிக்க வேண்டும்.

இல. 213 – திருமண வழிபாடும் மணமக்களின் திருமண வார்த்தைப்பாடும் உள்ளார்ந்த தனித்துவமானதாக இருக்க வேண்டும், அத்துடன் அதன் அர்த்தத்தை முழுமையாக அறிந்திருக்கவும் வேண்டும்.

இல. 214 – சுதந்திரம், பிரமாணிக்கம், ஒருவர் ஒருவருக்கு ஒத்தாசையாக இருத்தல் இவற்றின் மத்தியில் இன்றைய நவீன உலகில் திருமண வார்த்தைப்பாட்டினை வாழ்வது பலவீனமடைந்து வருகின்றது.

இல. 215 – திருமணம் எனும் அருளடையாளம் ஒரு தொடர் அர்ப்பணமாகும், அது மரணம் மட்டும் தொடர்கின்றது.

இல. 216 – திருமண வழிபாட்டில் பல்வேறுபட்ட ஆன்மீக பரிமாணங்கள், அடையாளங்கள், வாய்ப்புக்கள் காணப்படுகின்றன. அவைகள் மணமக்களின் மற்றும் அவர்களின் உறவினர்களின் உருவாக்கத்திற்கு பயன்படுத்தப்படலாம்.

இல. 217 – திருமணத்தின் ஆரம்ப காலங்களிலேயே மணமக்கள் குறிப்பிடத்தக்க சவால்களை எதிர்கொள்வதால் மணமக்களின் திருமணத்தின் பிற்பாடும், அதிலும் குறிப்பாக திருமணத்தின் ஆரம்ப ஆண்டுகளில் தொடர் உருவாக்கல் பயிற்சி அவர்களுக்கு வழங்கப்படல் வேண்டும்.

இல. 218 – திருமணமென்பது வாழ்வு முழுவதுக்குமான அர்ப்பணமும், தொடர் திட்டமுமாகும். அதிலே கணவனும், மனைவியும் ஒருங்கிணைந்து தங்களது திருமண வார்த்தைப்பாட்டிற்கு ஏற்ப நிறைவாக வாழவேண்டும்.

இல. 221 – இவர் எப்படிப்பட்டவர்? திருமணத்திற்கு பிற்பாடு எப்படி இருப்பார்? என்கின்ற போலியான எதிர்பார்ப்புக்கள் திருமண பிரிவுக்கான பொதுவான காரணியாகும்.

இல. 222 – (தங்கள்) வாழ்வின் புதிய வரவினை திறந்த மனதுடன் வரவேற்றல் திருமணத்தின் அடிப்படையாகும். அதனடிப்படையில் திருமண முன்னாயத்தங்கள் தம்பதியினரை வாழ்வினை வரவேற்கத் தயாரிக்க வேண்டும், அத்துடன் அவர்கள் பொறுப்புமிக்க பெற்றோராக செயற்பட (வாழ) வேண்டியதனை திருச்சபையின் படிப்பினைகள் சொல்லியும் கொடுக்கவும் வேண்டும்.

இல. 223 – புதிய திருமணங்களை ஆதரிக்க பங்குத் திருச்சபையானது பல்வேறான வழிமுறைகளை வழங்க வேண்டும்.

இல. 224 – திருமணத்தில் உண்மையான அன்பு பிரசன்னமாக இருக்கும்போது அங்கு ஏற்படக்கூடிய

இல. 224 – திருமணத்தில் உண்மையான அன்பு பிரசன்னமாக இருக்கும்போது அங்கு ஏற்படக்கூடிய எல்லாவிதமான பிரச்சனைகளையும். சவால்களையும் ஒருசில உதவிகளுடன் வெற்றிகொள்ள முடியம்.

இல. 225 – முதிர்ச்சிபெற்று இன்றும் தங்களது அன்பினைப் பகிர்கின்ற தம்பதியினர் இளம் தம்பதியினருக்கு எவ்வாறு தகுதியான முறையில் ஒருவர் ஒருவருக்காக நேரத்தை செலவிட்டு அதனூடாக பலனைப் பெறலாம் என்பதற்கான நடைமுறை ஆலோசனைகளை வழங்கலாம்.

இல. 226 – இளம் தம்பதியினர் ஒருவர் ஒருவருக்கிடையிலான அன்பினை விருத்திசெய்து அதனை ஆழமாக்கிக் கொள்ள உதவும் வழக்கமான (routine) செயற்பாடுகளை நாளந்தம் உருவாக்கிக்கொள்ள பரிந்துரைக்கப்படுகின்றார்கள், அத்துடன் தங்களது அன்பினை வெளிக்காட்ட வழக்கமான செயற்பாடுகளுக்கப்பால் விஷேட அடையாளங்களையும், செயல்களையும் பயன்படுத்தலாம்.

இல. 227 – குடும்பங்கள் ஆன்மீகத்திலும், இறைவேண்டல் பழக்கத்திலும் வளர அருட்பணியாளர்கள் பல்வேறுபட்ட செயற்பாடுகளினூடாக அவர்களை ஊக்குப்படுத்த வேண்டும்.

இல. 228 – தம்பதியினருள் ஒருவர் கிறிஸ்தவ நம்பிக்கையற்றவராக (சகோதர சமயத்தர்/ நம்பிக்கையற்றவர்) இருந்தால் அது திருமணத்திற்கு நோவினை, வருத்தத்தை ஏற்படுத்தும். ஆயினும் அவர்களது அன்பு உண்மையானதாக இருந்தால் அது கடவுளிமிருந்து வரும் கொடையாகும்.

இல. 229 – கிறிஸ்தவ சமூகமும், மறைமாநிலத் திருச்சபையும் சமூகத்தில் காணக்கூடிய பல்வேறுபட்ட வழிகளில், அதாவது எண்ணிடலங்காக நிகழ்ச்சித் திட்டங்கள், உதவி வழிமுறைகள் வாயிலாக குடும்பங்களுக்கு உதவலாம்.

இல. 230 – ஆலயத்தை மறந்து, ஆலயத்திற்கு சமூகம் கொடுக்காமலிருக்கின்ற அல்லது அவ்வப்போது மட்டும் வருகின்ற குடும்பங்கள் மட்டில் தேடிச் செல்கின்ற மறைபரப்பு அணுகுமுறை தேவைப்படுகின்றது. அதனூடாக அவர்களை நாடி, தேவைகளில் உதவிபுரிந்து, மீண்டும் ஒரே மந்தையினுள் கொண்டுவந்து சேர்ப்பது மேய்ப்புப்பணி சார்ந்த கரிசனையாகும்.

இல. 231 – நல்ல திராட்சை இரசத்தைப்போன்று நன்கு முதிர்ச்சிபெற்ற அன்புடை தம்பதியினரையும் நாம் அடையாளம் கண்டு கொள்கிறோம்.

இல. 232 – திருமண வாழ்வில் ஏற்படுகின்ற சவால்களும், சிக்கல்களும் தம்பதியினர் அன்பில் ஒன்றாக இணைந்து அத்தடைகளை மேற்கொள்ளத் தரப்படுகின்ற வழிமுறைகள் எனக்கருத வேண்டும். இத்தகைய ஒன்றுபட்ட பணியினூடாக அவர்களது அன்பு பெருகுகிறது.

இல. 233 – சிக்கல்கள் சரியான முறையில் எதிர்கொள்ளப்படவில்லை என்றால் அவையே தம்பதியினர் தங்களது திருமண ஒப்பந்தத்திலிருந்து பிரிந்துசெல்ல வழி சமைத்துவிடும்.

இல. 234 – சிக்கல்களை தம்பதியினர் ஒன்றாக இணைந்து எதிர்கொள்ள வேண்டும், அத்துடன் அவற்றை அவற்றின ஆரம்பத்திலேயே எதிர்கொள்ள வேண்டும். தவறும் பட்சத்தில் காலம் செல்லச்செல்ல அவற்றை எதிர்கொள்வது கடினமாகிவிடும்.

இல. 235 – சில சிக்கல்கள் அனைத்து திருமணங்களுக்கும் பொதுவானவவை. எனவே அத்தகைய தருணங்களில் உதவிபுரிய எப்போதும் தயாராக இருக்க வேண்டும்.

இல. 236 – சில சிக்கல்கள் தனித்துவம் வாய்ந்தவை. அவற்றிற்கு விடைகாண ஒப்புரவுக் கலையை (Art of Reconciliation) கற்றுக்கொள்ள அதிக உதவிகள் தேவைப்படுகிறது.

இல. 237 – திருமணத்தில் நிகழ்கின்ற மாற்றங்களும், சவால்களும் திருமணத்தை முடிவுக்கு கொண்டுவரும் காரணிகளாக மாறிவிடக்கூடாது மாறாக, அவையே அவர்களை ஒன்றுசேர்த்து அன்பினை புதுப்பிக்கும் வாய்ப்புக்களாக மாறவேண்டும்.

இல. 238 – பெரும்பாலான தம்பதியினர் தங்களது வாழ்வில் எதிர்கொள்ளும் சவால்களை முறியடிக்க வேண்டிய முதிர்ச்சியினை பெற்றுள்ளார்கள். ஆனால் சிதைவடைந்த திருமண உறவினை மீளக்கட்டியெழுப்ப வேண்டிய மேய்ப்புப்பணி செயற்பாடு மிகப்பெரிய தேவையாகவுள்ளது.

இல. 239 – குடும்பத்தில் ஏற்படக்கூடிய தொடர் துன்பங்களுக்கும், குழப்பங்களுக்கும் பெரும்பாலும் குழந்தைப்பருவ மற்றும் இளமைப்பருவ காயங்கள் காரணிகளாக அமைந்து விடுகின்றன.

இல. 240 – அத்தகைய காயங்கள் உரியநேரத்தில் ஆற்றப்படவில்லை என்றால் அவைகள் அவற்றை அனுபவிப்பவர்களுக்கும், அவர்களைச்சுற்றி இருப்பவர்களுக்கும் பலத்த பிரச்சனைகளை கொண்டுவரும்.

இல. 241 – குடும்பத்திலுள்ள ஒரு சிலரின் துர்நடத்தை காரணமாக பாதிப்புக்குள்ளாகின்ற ஏனையவரின் நன்மைத்தனம் கருதி, தம்பதியினரின், குடும்பத்தினரின் பிரிவு அவசியமாகின்றது.

இல. 242 – பிரிவினை, மணமுறிவு, விட்டுச்செல்லுதல் போன்ற காரணிகளால் துன்புறுவோர் மட்டில் புரிந்துணர்வுடையவர்களாய் இருப்பதுடன், அவர்களுக்கான மேய்ப்புப்பணி மட்டில் கரிசனையுடைவர்களாயும் இருக்க வேண்டும்.

இல. 243 – மணவுறிவு பெற்று இன்னுமொரு சிவில் பதிவுத் திருமணத்தில் இணைந்து கொண்டவர்கள் திருச்சபையிலிருந்து விலக்கிவிடப்பட்டவர்கள் அல்ல மாறாக, அவர்கள் இன்னமும் கிறிஸ்தவ சமூகத்தின் உறுப்பினரே என்பதை உணரவேண்டும்.

இல. 244 – இன்று திருமணத்தின் விலக்கு முறைகள் (annulment process) இலகுபடுத்தப்பட்டுள்ளது. ஆயினும் அவை நன்கு இயங்க வேண்டும்.

இல. 245 – மணமுறிவு தருணங்களில் பிள்ளைகளின் நலனே பிரதானமாகும். எனவே தாயும், தந்தையும் தாங்கள் பிரிய வேண்டிய காரணங்களுக்கு அப்பால், தங்களது பிள்ளைகளை காயப்படுத்தக்கூடிய விதத்தில் பேசவோ, செயற்படவோ கூடாது.

இல. 246 – இன்று காணப்படுகின்ற மணமுறிவானது பிள்ளைகளைக் காயப்படுத்துகிறது. எனவே அத்தகைய குடும்பங்களைச் சந்தித்து உதவதுடன், மணமுறிவினால் ஏற்பட்ட காயங்களைக் குணப்படுத்துவதற்கான வழிமுறைகளையும் வழங்க வேண்டும்.

தொடர்ச்சி 06ம் பக்கத்தில்....................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெரிய வெள்ளி பங்குகளின் காணிக்கை – 2018

| | |
|---|---|
| I. புனித லூர்து அன்னை, பாலையூற்று | 71,585.00 |
| 2. புனித மரியாள் பேராலயம் | 56,780.00 |
| 3. இறை இரக்கம் அலஸ்தோட்டம் | 35,900.00 |
| 4. குழந்தை இயேசு, உவர்மலை. | 30,540.00 |
| 5. புனித சூசையப்பர், நிலாவெளி | 23,664.00 |
| 6. புனித குவாடலூப்பே, சின்னக்கடை | 20,300.00 |
| 7. புனித திருமுழுக்கு யோவான், சாம்பல்தீவு | 16,460.00 |
| 8. புனித அந்தோனியார், மூதூர் | 16,200.00 |
| 9. புனித வனத்து அந்தோனியார் செல்வநாயகபுரம் | 11,300.00 |
| 10. திரு இருதய ஆண்டவர், இருதயபுரம் | 10,000.00 |
| 11. திரு இருதய ஆண்டவர், கந்தளாய் | 4,360.00 |
| 12. கிறிஸ்து அரசர் ஆலயம், கன்னியா | 4,000.00 |
| 13. புனித பாத்திமா அன்னை ஆலயம், தம்பலகாமம் | 2,000.00 |
| 14. புனித அந்தோனியார், சீனக்குடா | – |
| 15. புனிதசெபமாலை மாதா, குச்சவெளி | 1,000.00 |

## திருப்பாலத்துவ சபை பங்குகளின் காணிக்கை – 2018

| | |
|---|---|
| 01. புனித லூர்து அன்னை, பாலையூற்று | 46,050.00 |
| 02. புனித மரியாள் பேராலயம் | 35,418.00 |
| 03. புனித அந்தோனியார், மூதூர் | - |
| 04. திரு இருதய ஆண்டவர், இருதயபுரம் | 33,000.00 |
| 05. இறை இரக்கம் அலஸ்தோட்டம் | 21,500.00 |
| 06. குழந்தை இயேசு, உவர்மலை. | 17,590.00 |
| 07. புனித திருமுழுக்கு யோவான், சாம்பல்தீவு | 11,600.00 |
| 08. புனித சூசையப்பர், நிலாவெளி | 10,175.00 |
| 09. புனித வனத்து அந்தோனியார் செல்வநாயகபுரம் | 5,000.00 |
| 10. புனித பாத்திமா அன்னை ஆலயம். தம்பலகாமம் | 4,600.00 |
| 11. புனித அந்தோனியார், சீனக்குடா | 3,500.00 |
| 12. திரு இருதய ஆண்டவர் ஆலயம், கந்தளாய் | 3,500.00 |
| 13. கிறிஸ்து அரசர், கன்னியா | 3,000.00 |
| 14. புனித செபமாலை மாதா, குச்சவெளி | 1,000.00 |
| முழுத்தொகை | 195,933.00 |

## தேவ அழைப்பு - பங்குகளின் காணிக்கை 2018

| | |
|---|---|
| 01. புனித மரியாள் பேராலயம் | 42,770.00 |
| 02. புனித குவாடலூப்பே, சின்னக்கடை | 16,350.00 |
| 03. குழந்தை இயேசு, உவர்மலை. | 12,020.00 |
| 04. திரு இருதய ஆண்டவர், மூதூர் | 10,500.00 |
| 05. புனித திருமுழுக்கு யோவான், சாம்பல்தீவு | 8,550.00 |
| 06. புனித வனத்து அந்தோனியார் செல்வநாயகபுரம் | 4,000.00 |
| 07. கிறிஸ்து அரசர் - கன்னியா | 3,500.00 |
| 08. புனித பாத்திமா அன்னை, தம்பலகாமம் | 1,500.00 |
| 09. புனித செபமாலை மாதா, குச்சவெளி | 1,000.00 |
| 10. திரு இருதய ஆண்டவர் ஆலயம், கந்தளாய் | 920.00 |
| 11. புனித லூர்து அன்னை, பாலையூற்று | - |
| 12. இறை இரக்கம் அலஸ்தோட்டம் | - |
| 13. புனித சூசையப்பர், நிலாவெளி | - |
| 14. புனித அந்தோனியார், சீனக்குடா | - |
| 15 புனித அந்தோனியார், மூதூர் | - |
| முழுத்தொகை | 101,110.00 |

அருள்பணியாளர் .D. அன்ரூ ஸ்டீபன்
நிதிப்பொறுப்பாளர்.
ஆயர் இல்லம்,
உவர்மலை,
திருகோணமலை

## அறிவித்தல்

திருமலைத்தீபத்தில் இடம்பெறுகின்ற போட்டிகளில் பங்கு பற்றி வெற்றி பெற்றவர்கள் தமக்குரிய பரிசில்களை அலுவலக நேரத்தில் வந்து பெற்றுக் கொள்ளுமாறு தெரிவித்துக்கொள்கின்றோம்.

- திருமலைத்தீபம்

# ஞானப்பெற்றோரின் முக்கியத்துவமும் ஞானம் பற்றிய தெளிவான சிந்தனையும்



அருட் சகோ. எமர்சன் றாகல்,
மெய்யியல் பீடம்
தேசிய குருமடம்.
கண்டி

### முன்னுரை

ஞானப்பெற்றோரை நினைவுகூறும் இவ் ஆண்டில் ஞானப்பெற்றோரைப் பற்றியும் அவர்களின் கடமை, பங்களிப்பு, அவர்கள்மேல் கொண்டுள்ள மரியாதை குறித்து சிந்திக்க கடமைப்பட்டுள்ளோம். இக்கட்டரை "ஞானம்" எனும் அடிப்படை அம்சம் ஞானப்பெற்றோரிடம் எவ்வாறு இருக்க வேண்டும் எனவும், ஞானப்பெற்றோரின் அவசியம் பற்றி அறிந்து கொள்ளுவதற்கும் உறுதுணையாக விளங்கும் என்று நாம் எண்ணுகின்றோம்.

### *I.* யார் இந்த ஞானப்பெற்றோர்?

ஒரு கிறிஸ்தவன், புகுமுக அருட்சாதனங்களைப் பெற்று திருச்சபையில் ஒரு அங்கத்தவராகவும் முதிர்ச்சியடைந்த ஒரு கிறிஸ்தவராகவும் வளர்வதற்கும், கிறிஸ்தவ படிப்பினைகளுக்கேற்ப தாம் பெற்ற அழைப்பை உணர்ந்து கொள்ள அவர்களுக்கு வழிகாட்டிகளாக அமைபவர்கள் ஞானப்பெற்றோர் ஆவர். இறைஞானத்தில் பிள்ளைகளை வளர்ப்பது ஞானப்பெற்றுரோின் தலையாய கடமையாகும். திருச்சபை சட்டம் எண் 872, 892களில் "ஞானப்பெற்றோர் திருமுழுக்கில் கிறிஸ்தவப் புகுமுகநிலைகளில் துணைபுரிவார்: குழந்தையை அதன் பெற்றோருடன் திருமுழுக்குக்கு கையளிப்பார்: திருமுழுக்கு பெற்றவர் திருமுழுக்குக்கேற்ப கிறிஸ்தவ வாழ்வு நடத்தவும், திருமுழுக்கில் ஊன்றியுள்ள கடமைகளை உண்மையுடன் நிறைவேற்றவும் உதவி செய்வார். மேலும் உறுதிப்பூசுதல் பெற்றவர் கிறிஸ்துவின் உண்மையான சாட்சியாய்ச் செயல்படுவதையும், இவ்வருளடையாளத்தில் ஊன்றியள்ள கடமைகளை உண்மையுடன் நிறைவேற்றுவதையும் கவனித்துக் கொள்வது ஞானப்பெற்றோரின் கடமை" என கூறப்படுகின்றது.

ஞனப்பெற்றோர் ஒருவர் மட்டும், ஆண் அல்லது பெண் இருக்கலாம்: அல்லது ஒவ்வொரு பாலினத்திலும் ஒருவர் இருக்கலாம். ஞானப்பெற்றோர்களாகத் திகழ்பவர்கள் பின்வரும் தகைமைகளை பெற்றிருக்க வேண்டும். இவற்றைப் பற்றி திருச்சபை சட்டம் எண் 874இல் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

1. திருமுழுக்குப் பெற வேண்டியவர் அல்லது அவரின் பெற்றோர் அல்லது அவர்களின் இடத்தில் இருப்பவர், அல்லது அவர்கள் இல்லாதிருப்பின், பங்குக்குரு அல்லது பணியாளரினால் நியமிக்கப்பட்டிருக்க வேண்டும். இப்பணிக்குத் தகுதியுடயவராகவும் அதை நிறைவேற்றும் எண்ணம் கெண்டவராகவும் இருக்க வேண்டும்.
2. மறைமாவட்ட ஆயர் வேறொரு வயதை நிர்ணயித்திருந்தாலோ அல்லது பங்குக்குருவுக்கோ பணியாளருக்கோ நியாயமான ஒரு காரணத்திற்காக விதிவிலக்கு அளிக்க வேண்டுமென்று தோன்றினாலோ அன்றி, பதினாறு வயது நிரம்பியவராக இருக்க வேண்டும்.
3. கத்தோலிக்கராகவும், உறுதிப்பூசுதல் பெற்ற ஏற்கனவே புனிதமிகு நற்கருணை அடையாளத்தைப் பெற்றவராகவும், விசுவாசத்திற்கும் தாம் மேற்கொள்ளவிருக்கும் பணிக்கும் ஏற்ற வாழ்வு நடத்துபவராகவும் இருக்க வேண்டும்.
4. சட்டமுறைப்படி விதிக்கப்பட்ட அல்லது அறிக்கையிடப்பட்ட எவ்விதத் திருச்சபை தண்டணைக்கும் உட்பட்டவராக இருக்கக்கூடாது.
5. ஞானப்பெற்றோர் திருமுழுக்குப் பெற வேண்டியவரின் தந்தையாகவோ. தாயாகவோ இருக்கக் கூடாது.

எனவே. இவ்வகையான சட்டங்களை திருச்சபை வகுத்துள்ளது.

தொடரும்.........

### திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின்....

05ம் பக்கத் தொடர்ச்சி ...

இல. 247 – கத்தோலிக்கருக்கும், திருமுழுக்கு பெற்ற மரபுவழிவந்த ஏனைய திருச்சபைகளைச் சார்ந்த ஒருவருக்குமிடையில் நிகழும் கலப்புத் திருமணமானது (Mixed Marriage) தனித்துவமான ஒரு சவாலை முன்வைக்கின்றது. அதேவேளையில் அத்திருமணமானது கிறிஸ்தவ ஒன்றிப்புக்கும், பிரத்தியேக வளர்ச்சிக்கும் வாய்ப்பினை அளிக்கின்றது.

இல. 248 – கத்தோலிக்கருக்கும், திருமுழுக்கு பெறாத சகோதர சமயத்தவருக்கிடையில் நிகழும் இரு சமயத் திருமணமானது (Disparity of Cult) தனித்துவமான சவாலை விடுக்கின்றது. அதுமட்டில் விசேடமான மேய்ப்புப்பணி அக்கறை செலுத்தி கத்தோலிக்க விசுவாசத்தை குடும்பத்தில் பாதுகாக்க உதவதுடன், இருவரினதும் சமயச் சுதந்திரத்தினை பேணவும் உதவ வேண்டும்.

இல. 249 – சாதாரண திருமணம் ஒன்றில், மணமக்களில் யாராவது ஒருவர் திருமுழுக்கினை நாடுகின்றபோது முன்மதியுடைய மேய்ப்புப்பணி அக்கறை தேவையாகவுள்ளது.

இல. 250 – ஓரினச் சேர்க்கையில் (same-sex marriage) வாழ்வோரை மதிப்புடன் நடாத்துவதுடன், அவர்களுக்கும், அவர்களது குடும்பங்களுக்கும் மதிப்புமிக்க வழிகாட்டுதல் வழங்கப்பட வேண்டும்.

இல. 251 – ஓரினச் சேர்க்கையில் இணைந்துள்ளவர்கள் எந்தவிதத்திலும் சாதாரண திருமணத்திற்கு ஈடாகவோ அல்லது கடவுளின் திருமணம், குடும்பம் எனும் திட்டத்திற்கு சமமாகவோ மாறிவிட முடியாது.

இல. 252 – எந்தவொரு காரணத்தினாலோ தனிநபர் குடும்பமாக (single parent) உள்ளவர்களுக்கு அக்காரணிகளை நோக்காது உதவிபுரிய வேண்டும்.

இல. 253 – துன்புறுவோருக்கு ஆறுதல் அளியுங்கள்.

இல. 254 – அன்பு செய்த ஒருவரை இழப்பது கடினமானது. எனவே ஒருவர் ஒருவருக்கு உதவுங்கள்.

இல. 255 – அழுது துயரப்படுவது ஒரு தொடர் நிகழ்வாகும். அதனூடாக குடும்பத்தில் இறந்தவரை இன்னும் உள்ளார் என்கின்ற உணர்வுடன் அன்பு செய்துகொண்டு வாழ்வில் தொடர்ந்து முன்னேற வேண்டும்.

இல. 256 – கிறிஸ்தவர் நமக்கு மரணம் பிறப்பின் முடிவல்ல ஆதலால் நாம் விண்ணக வாழ்வின் எதிர்நோக்குடன் வாழ வேண்டும்.

இல. 257 – நாம் மண்ணகத்தில் இறந்தவர்களுக்காக மன்றாட வேண்டும். அங்கே விண்ணகத்திலிருப்போர் நமக்காக மன்றாடுவார்கள்.

இல. 258 – நாம் நமது வாழ்வினை கடந்தபோனதை எண்ணி வீணடிக்கக்கூடாது மாறாக, தற்போதைய வாழ்வினைக் கருத்திற்கொண்டு வாழ வேண்டும்.

(அலகு 7 அடுத்த இதழில் தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்மையைக் காணவே .....

அருட்பணியாளர் என்.சி. அருள்வரதன்



தியாயத்தை மறவாமல்
நீதியைக் கடைப்பிடிப்போம்
எல்லோரும்
நம்மோடு வாழ்பவர்கள்
நமக்குள்ளே பிளவுகள்
ஏற்படவே வேண்டாம்

ஒருவரை உயர்த்தியும்
ஒருவரை விழ்த்தியும்
வாழ்வதால்
என்னதான் கண்டோமோ

நாட்டிலே தொடரும்
திலமைகளும்
வழிமுறையும்
கூட்டுச் சேர்த்தோர்
கூறுவதும்
மக்களுக்குதவா
தொடர்வடிவே

போர்க்கால
அவலங்கள்
போர் முடித்தும் இன்று வரை
முடியாமல் தொடரும்போது
வேதனையுள் புதைத்தவர்கள்
விடிவின்றியே
முடங்கிவிட்டார்களே

நீதி திலைபெற வேண்டும்
உண்மைகள்
மறைத்து விடக்கூடாது
பொய்களும் புரட்டுக்களும்
புறத்தள்ளப்பட்டு
அன்பினை அனைவருமே
ஆணிவேராய்க் கொண்டெழுத்தால்
உண்மையில்
விருட்சமது
உயர்த்து தின்று
பலன்தருமே

## அன்பின் வழிகளிலே.......

- கவிதை வரிகளை
- சரியாக வடிவமையுங்கள்
- கவிதை வரிகளில் மூன்று வரிகள் மட்டும்
- இடம் மாறி உள்ளன
- சரியாக அவதானித்து
- வடிவமையுங்கள்
- போட்டியில் எல்லோரும் பங்கு கொள்ளலாம்
- எல்லோரும் சரியாக வடிவமைத்தால்
- குலுக்கல்மூலம் தெரிவு இடம்பெறும்

1ம் இடம் : 500 /-
2ம் இடம் : 300/-

**முடிவுத்திகதி 25.07.2018**

இதோ கவிதை வரிகள் ..........

❖ அன்பினை மறவாமல்
❖ ஆற்றுவோம் பணிகளையே
❖ அறவழி தொடருவோமே
❖ பிறர் நலம் பேணியே எங்கும்
❖ பெரும்பணி புரியும்போது
❖ நிறைந்திடும் மகிழ்வாலங்கு
❖ நிலைபெறுமே அமைதி அங்கே
❖ அன்பின் உணர்வுகளை
❖ அடித்தளமாய்க் கொண்டு நாங்கள்
❖ முன்னெடுக்கும் கருமங்கள்
❖ முற்றிலும் வெற்றிதரும் எனவே
❖ அன்பினால் வளர்ந்து நாளும்

**பண்டத்தரிப்பு**
**மண் மகிழ**
**16**
**11**
**1924**



**மீன்பாடும் தேன் நாட்டில்**
**கண் நெகிழ**
**03**
**06**
**2017**

**உயிர்ப்பும் உயிரும் நானே என்னில் விசுவாசம் கொள்பவன்**
**இறப்பிலும் உயிர் வாழ்வான் – யோ 11: 25**

அரசரெத்தினம் சுவாமிகளின்
அழியாத நினைவலைகளே........!

ஆண்டொன்று கழிந்தும்
ஆழ் மனத்துயரம் அகலவில்லை
அரசரெத்தினம் சுவாமிகளின்
அழியாத நினைவலைகளே....!
பண்டத்தரிப்பு ரெத்தினம்மா
பாசம் பரிவு தன்னடக்கம் பிறர்சினேகம் கற்புமாய்

பண்பால் பட்டை தீட்டியரெத்தினம்மா
பரமனும் தெரிந்திட்ட அன்னம்மா சைமனுக்கும்
அருந்தவப் புதல்வனையம்மா
ஆளுமோ ! கறுப்பு தானம்மா
அகமோ! சுட்ட தங்கமல்ல
சுத்த தங்கந்தானம்மா
ஆன்ம குழு நிலையாம் தூத்துக்குடியிலேயே

அவரது பணிவாழ்வு இங்கில்லையென்று
இலங்கைத் தீவில் உள்ளதென்று
இராப் போஷனப்பின்னாடி அனுப்பி வைத்தர் இங்கு
இறைபணியை சிரமேற் தாங்கிய செம்மல்
அறுபத்தொன்பதில் பணி தொடர
ஆலயமும் நாடினார் பழமையூராம்
கொட்டியாபுரம் பங்கை

மிக்கேல் டீ மெல்லோ கன்னியர் மடமும்
மிகக் குறுகிய காலமதில்
குருமனையும் அமைத்தார்
அறுபத்தி நாலாமாண்டு வீசிய புயலால்
அடிகளார் ஞானப்பிரகாசம் மண்டபம் சிதைவுற்றது
பணம் நல்கியவர்கள் சிங்கப்பூர் பென்ஷனியர்களும்
பங்கு மக்களின் அயராத பங்களிப்பால்
பலனானது நூறு மடங்கே!

நான் உனக்கு கூறுகிறேன்
நாமமோ பேதுரு இந்த
பாறையின் மேல் என் திருச்சபையைக் கட்டுவேன்
பாதாளத்தின் வாயில்கள் அதன்
மேல் வெற்றி கொள்ளா விண்ணரசின்
திறவுகோல்களைத் தருவேன் (மத்தேயு 16:18–19)
மேட்டுக்குடியாம் கெங்கையில்

குடிசையில் குடியமர்த்தி வழிபட்டனர்
குருவானவரும் அதுவும் நலமெனக் கண்டார்
கடற்கரையண்டி சிற்றாலயமாக்கினார்
கலங்கரை விளக்காய் ஒளிவீசி காத்தார்
ஆனி பதின்மூன்றில் அந்தோனியார் விழாவே
அன்னதானங்களும் வள்ளங்களும் வரிசையில்

கொல்லனாற்றில் கொடியேந்தி நிற்குமே!
கொஸ்தாவும் பர்னாந்துவும்
இன்முகமலர நிற்பார்கள்
பக்கத்தூர் பச்சநூர் இருதயபுரம்பங்கு
பாமரமக்களுக்கு பாலர் வகுப்புமாய்
கமத்தொழிலில் ஊக்கவிக்க
கமநலச் சேவையில் கடனுமானியமும் பெற்றனரே

ஆலயத்திருவிழாவும் பாஸ்கா வென்றாலும்
அயல் பங்கு மக்களுக்கு முதல் மரியாதை
அதுதான் அன்னாரின் சேவையின்
சாதூரியமென்பேன்
அகத்துள் கட்டி வைத்தனர் அன்புத்
தொல்லையால்
காலப்போக்கில் கண்பார்வையிழந்தும்
கர்த்தரின் கண்ஒளியில் கற்சிதமாய்

**ஆக்கியோன்**
**அ. குமார் கொறெயிரா**
**கொட்டியாரத்தான்**
**மூதூர் – 03**

# இளையோர் திறன் உயர ....



சென்ற இதழ் தொடர்ச்சி ................

## 11. நம்பிக்கையின் வெற்றி

1452இல் இத்தாலியில் பிறந்தவர் லியானோ டாவின்ஸி. ஓவியராக மட்டும் அல்லாமல் பல்வேறு துறைகளில் தனக்கென தனி முத்திரை பதித்து வரலாற்றில் அதே புகழுடன் வாழ்பவர். அறிவியல் துறையின் சாதனைகளில் இவருடைய ஆக்கங்களுக்கெனத் தனித்த இடமுண்டு. ”தனது சமகாலத்தவர்களிடையே ஒரு விண்கலத்தைப் போல மேலெழுந்தவர்”, என்று புகழப்பட்ட இவர் தம்முடைய 30வது வயதில் புதிய துறையொன்றில் சாதிக்க விருப்பம் கொண்டு மிலானுக்குப் பயணமானார்.

லோடோவிகோ ஸ்போர்சா என்பவரின் ஆட்சிக்குட்பட்டிருந்த மிலானின் படையில் சேர விரும்பினார். தனக்கு ஒரு பணியைத் தர வேண்டும் என விரும்பி அந்நாட்டின் தலைமைக்கு அவர் எழுதிய கடிதச் சுருக்கம் இது,

**புகழ்வாய்ந்த பிரபுவே**

1. என்னால் உறுதியானதும், இலேசானதும், தூக்கிச் செல்லக் கூடியதுமான பாலங்களைக் கட்ட முடியும். தீயையும். தாக்குதல்களையும் எதிர்க்கவல்ல பாலங்களையும் கட்ட முடியும். என்னால் எதிரிகளின் பாலத்தைத் தகர்க்கவோ, எரிக்கவோ கூட முடியும்.
2. ஏணி போன்ற கருவிகளை என்னால் உடனடியாகத் தயாரித்துத் தர முடியும்.
3. அடித்தளம் கல்லின்மீது பொருத்தப்படாமல் இருக்குமாயின் எவ்வளவு உயரம் கொண்ட கட்டிடத்தையும் தகர்க்க முடியும்.
4. சத்தமின்றி எந்தத் தூரத்திற்கும் நேராகவோ, வளைவாகவோ சுரங்கப் பாதைகளைக் கட்ட முடியும். தேவையெனில் அகழிகளுக்கடியிலோ அல்லது நதிகளுக்கடியிலோ
5. நெருப்பையும், பிரங்கிக் குண்டுகளையும் தாங்கவல்ல கப்பல்களை என்னால் தயாரிக்க முடியும்.

இப்படிப் பட்டியலை நீட்டுகிறது தனது அறிவுத்திறத்தின் மீது அவருக்கு இருந்த நம்பிக்கையால் கோர்க்கப்பட்ட எழுத்துக்களால் ஆன இக்கடிதம், “மேற்கூறிய ஏதாவது ஒன்றை முடியாதது என்றோ, சாத்தியமற்றது என்றோ யாரேனும் கருதும் பட்சத்தில் அதனைத் தங்கள் பூங்காவிலோ அல்லது தாங்கள் கூறும் வேறு எந்த இடத்திலாவதோ நிரூபித்துக் காட்ட மிகப்பணிவுடன் நான் காத்திருக்கிறேன்” என்று அவருடைய நம்பிக்கையின் உச்சம் கடிதத்தின் இறுதியில் பளிச்சிடுகிறது.

இந்தக் கடிதம் மிலானில் 16 ஆண்டு காலம் படைப்பொறியாளர் பதவியில் டாவின்சியை இயங்க வைத்து. பிந்தைய காலங்களில் ”பிரபஞ்ச மேதை” என்ற புகழை ஈட்டித் தந்தது. இளையோரின் வெற்றி தேடும் நம்பிக்கைக்கு இந்த 30 வயது கடிதம் வழிகாட்டும் என உரத்த குரலில் கூறலாம்.

“அது பேய்! பேய்க்குக் கால் இருக்காது! இரவில் நடமாடும். ஜல் ஜல் எனச் சலங்கை கட்டி நடக்கும்“, என்று சொல்லும் முரண்பாட்டைத் தான் இளையோர் மத்தியிலும் ஊடகங்கள் செய்கின்றன. சமகால இளையோரை வாழ்க்கையின் தேடல்களில் நம்பிக்கையற்றவராகக் காட்டும் அதே ஊடகங்கள் கற்பனைக் கதாநாயகர்களை மட்டும் அடிக்கடிப் பிரசவிக்கின்றன.

நம்பிக்கை இல்லா மனமுடையவர் துடிக்காத இதயத்தவர். எதார்த்தங்களாலும். இலட்சியங்களாலும். அனுபவங்களாலும் பின்னப்பட்ட மனம் நம்பிக்கைகளால் ஊன்றி எழும்போது வெற்றிகள் முகவரி கேட்டுக் கதவைத் தட்டத்தான் செய்கின்றன. நம்பிக்கையோடு ஊன்றி எழுவோம்! நம்பிக்கைத் தடிகளோடு நடையிடுவோம்! **நம்பிக்கைகளால் வெற்றியடைவோம் நம் இதயம் இயங்கும் வரை......!**

தொடரும்..................
நன்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பியம்

## அன்பியக் கூட்டம் நடந்த பின் கவனத்திற்குக் கொண்டு வர வேண்டியவை

❖ அன்பியக் கூட்டமானது எல்லா வீடுகளிலும் சுற்றுமுறையில் (Rotation) நடைபெற வேண்டும். இதில் எந்த வேறுபாடும் இருக்கக் கூடாது. வசதி படைத்தவர்கள் இல்லத்தில் நடைபெற்றால் தாரா௭ மனதுடன் செயல்படுவார்கள். வசதி குறைந்த வீடுகளில் வைக்கும்போது காணிக்கை எடுத்து அவ்வீட்டினருக்கு உதவி செய்யலாம்.

❖ அன்பியக் கூட்டத்தை மாதம் ஒரு முறையோ அல்லது இரண்டு முறையோ வைத்துக்கொள்ளலாம்.

❖ அன்பியத் திருப்பலிகள் அன்பியங்களில் பங்குத்தந்தையின் வசதிக்கேற்ப வீடுகளில் நடைபெறும். எந்த வீட்டில் திருப்பலி நடத்த வேண்டும் என்பதை அன்பிய உறுப்பினர்களே தேர்வு செய்வார்கள்.

❖ கூட்டம் நடத்தும் முறையானது மிகவும் முக்கியமானது. இதில் சிறுவர் முதல் பெரியவர் வரை எல்லோரும் இறைஅனுபவம் பெற்று மகிழும் விதத்தில் அமைய வேண்டும். அப்போது தான் அடுத்த கூட்டத்திற்கு அன்பிய உறுப்பினர்கள் ஆர்வத்தோடு வருவார்கள். சிறப்பாகக் கூட்டம் நடத்த அன்பியப் பொறுப்பாளர்கள் பயிற்றுவிக்கப்பட வேண்டும்.

❖ ஒரு அன்பியக் கூட்டம் நடத்துவதற்கான நேர அளவு மணி நேரம் தேவைப்பட்டால் 1/2 மணி நேரத்தைக் கூட்டலாம். நேரம் அதிகமாய்ப் போய்விடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

❖ ஒவ்வொரு முறை அன்பியக் கூட்டம் முடிந்த பின் எழுதப்பட்ட வருகைப் பதிவேடு, செயல்திட்ட குறிப்புக்கள் அடங்கிய பதிவேட்டை பங்கின் அன்பிய ஒருங்கிணைப்பாளரிடம் ஒப்படைத்துவிட்டு அடுத்த கூட்டத்திற்குச் செல்லும்போது அந்தப் பதிவேட்டை வாங்கிச் செல்ல வேண்டும்.

நன்றி - தோழன்



## தூய மாற்கு நற்செய்தி




# ஒத்தமை நற்செய்தி

சென்ற இதழ் தொடர்ச்சி.....

இவ்வாறு ஒத்தமை நற்செய்திகளில் நாம் காணும் ஒற்றுமை, வேற்றுமைகளுக்கு முக்கியமான காரணங்கள் என்ன என்று ஆராயும்போது தீர்வாக :

1. பல்வேறு வாய்மொழிப் பாரம்பரியங்களைப் பயன்படுத்தினர். பல பாரம்பரியங்களை நற்செய்தியாளர்கள் பயன்படுத்தியதனால், அவர்களிடையே ஏற்பட்ட வேற்றுமைகளைப் புரிந்து கொள்ளலாம். ஆனால், ஒற்றுமைக்குக் காரணம் என்ன என்பது தான் கேள்வி.

2.மூன்று நற்செய்தியாளர்களும் "மூல நற்செய்தி" ஒன்றைச் சார்ந்து தம் நற்செய்தியைப் புனைந்துள்ளனர். இதன்படி அரமேயுக்கு மொழியில் இருந்த இயேசுவின் பொன்மொழிகளை, புனித மத்தேயு கிரேக்க மொழியில் மொழி பெயர்த்தார் என்றும், இந்த மொழிபெயர்ப்பைச் சார்ந்து மத்தேயு, மாற்கு, லூக்கா மூவரும் தாங்கள் நற்செய்தி நூலை எழுதினார்கள் என்றும் நம்பப்பட்டது. எனவே மத்தேயு நற்செய்திதான் மூலநூல் என்று புனித அகுஸ்தினாரின் காலம் தொட்டு கடந்த நூற்றாண்டு வரை நம்பப்பட்டது. இன்று இக்கருத்து ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை.

3. மூன்று நற்செய்திகளுக்கு இடையேயுள்ள ஒற்றுமைக்கான தீர்வு யாதெனில் ஒருவர் மற்றொருவருடைய நூலைப் பயன்படுத்தியிருக்க வேண்டும். இதனடிப்படையில் நாம் ஏற்கெனவே கூறியிருந்த ஒரு கருத்தினை நினைவுபடுத்துதல் அவசியம். அதாவது மாற்கு நற்செய்தியில் அடங்கிய செய்திகள் பெரும்பாலும் மத்தேயுவிலும் லூக்காவிலும் விரவிக்கிடக்கின்றன. எனவே மாற்கு நற்செய்தியினை மூலமாகக் கொண்டு மத்தேயுவும், லூக்காவும் தமது நற்செய்தியினைப் புனைந்துள்ளனர் என்பது இன்றைய விவிலிய வல்லுனர்களின் கணிப்பு ஆகும். அவ்வாறெனில் மாற்குவின் முதன்மை எங்ஙனம் நிறுவப்படுகின்றது என்பது பற்றியும் சிந்திக்க வேண்டியுள்ளது.

### மாற்குவின் முதன்மை

சிலநேரம் மத்தேயுவிலும், லூக்காவிலும் மாற்கிலிருந்து வேறுபட்ட பகுதிகள் அமைப்பிலும் வரிசையிலும் வருகின்றன. ஆனால் அவற்றில் சில புரியாத பகுதிகள் வருகையில் அவற்றை மாற்கு நற்செய்தியில் வரும் பகுதி மூலம் விளக்கலாம்.

எடுத்துக்காட்டாக மத் 9:2இல் "இயேசு அவர்களுடைய நம்பிக்கையைக் கண்டு" என வருகிறது. அதற்குமுன் அப்பொழுது சிலர் முடக்குவாதமுற்ற ஒருவரைக் கட்டிலில் கிடத்தி அவரிடம் கொண்டு வந்தனர் (9:2) என வருகிறது. எனவே, அவர்களுடைய நம்பிக்கையைக் கண்டு என்பது சரியாக விளக்கப்படவில்லை. ஆனால் மாற்கு நற்செய்தியில் எப்படி அவர்கள் வீட்டின் கூரையை உடைத்து திறப்பு உண்டாக்கி முடக்குவாதமுற்றவரை படுக்கையோடு கீழே இறக்கினர் என்பது சொல்லப்படுகின்றது (மாற்கு 2:4)

தொடரும்.................

நன்றி ~ விவிலிய விருந்து

சென்ற இதழின் தொடர்ச்சி....

# பெற்றோரின் பாவம் பிள்ளைகளைச் சாரும்

**இவ்விரு உண்மைகளையும் உறுதி செய்கிறது பின்வரும் இறைமொழி:**

'உயிர் அனைத்தும் எனக்கே சொந்தம். பெற்றோரின் உயிர் என்னுடையது! பிள்ளைகளின் உயிரும் என்னுடையதே! பாவம் செய்யும் உயிரே சாகும். ஒருவன் நேர்மையாளனாய் இருந்து நீதியையும் நேர்மையையும் கடைபிடித்தால்....... என் நியமங்களையும் நீதி நெறிகளையும் கடைப்பிடித்து உண்மையுள்ளவனாக நடந்து கொண்டால் அவன் நீதிமான் ஆவான்! அவன் வாழப் போவது உறுதி.

ஆனால் அவனுக்குப் பிறந்த மகன் கட்டுக்கடங்காதவனாகவும்.... அருவருப்பான இவற்றையெல்லாம் செய்துள்ளதால் அவன் சாவது உறுதி.

ஆனால் இவனுக்குப் பிறந்த மகன் தன் தந்தை செய்த பாவங்களை எல்லாம் கண்டு தெளிந்து அவ்வாறு செய்யாதிருந்தால் அவன் தன் தந்தையின் குற்றத்திற்காகச் சாக மாட்டான். அவன் வாழ்வது உறுதி.... மனம் மாறி உங்கள் குற்றங்கள் அனைத்தையும் விட்டு விலகுங்கள். அப்போது தீமை உங்கள் வீழ்ச்சிக்குக் காரணமாய் இராது' ( எசே 18:4-5, 9-10, 13-14, 17-30).

# விவிலியத்தில் குடும்பம்



*ஒரு சொல்லில் சொலின்*

பெற்றோரின் பாவத்தால் விளைந்த சில இயற்பொருள் தீமைகள் பிள்ளைகளின் வாழ்வுச் சூழலைப் பாதிக்கலாம். ஆனால் பிள்ளைகள் தம் பெற்றோரின் பாவ நிலையறிந்து, தெளிந்து, தேர்ந்து, அறவழி வாழ்விலும் இறை உறவிலும் நிலைக்கக் கற்றுக் கொண்டால் நிச்சயமாகப் பெற்றோர் பாவம் பிள்ளைகளைப் பாதிக்காது. அதற்கு மாறாகப் பிள்ளைகளும் தம் பெற்றோர் வாழ்ந்த பாவத்திலேயே மூழ்கிப் போயினர் எனின், ஆண்டவரைப் புறக்கணிக்கும் மூதாதையரின் பாவங்கள் பிள்ளைகள் மேல் வரும். மூன்றாம் நான்காம் தலைமுறை மட்டும் தண்டிக்க பெறுவர் என்பது உறுதி ( காண். வி ப 20: 5-6)

நன்றி ~ விவிலிய விருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறைமாவட்ட விவிலிய அறிவுப்போட்டி முடிவுகள் - 2018

## தமிழ் மொழி

**கீழ்பிரிவு**

1ம் இடம் : புனித மரியாள் பேராலயப்பங்கு
2ம் இடம் : புனித அந்தோனியார் ஆலயப்பங்கு, மூதூர் பங்கு
3ம் இடம் : புனித லூர்து அன்னை ஆலயப்பங்கு, பாலையூற்றுப்பங்கு (அன்புவழிபுரம்)

**மேல்பிரிவு**

1ம் இடம் : புனித லூர்து அன்னை ஆலயம், பாலையூற்றுப்பங்கு, (அன்புவழிபுரம்)
2ம் இடம் : புனித குவாடலூப்பே அன்னை ஆலயப்பங்கு.
3ம் இடம் : புனித மரியாள் பேராலயப்பங்கு



## சிங்கள மொழி

**கீழ்பிரிவு**

1ம் இடம் : புனித மரியாள் பேராலயப்பங்கு
2ம் இடம் : புனித குவாடலூப்பே அன்னை ஆலயம்
3ம் இடம் : புனித அந்தோனியார் ஆலயம், சீனக்குடா

**மேல்பிரிவு**

1ம் இடம் : புனித அந்தோனியார் ஆலயம், சீனக்குடா
2ம் இடம் : புனித அந்தோனியார் ஆலயம், சீனக்குடா (ஆன்டாங்குளம்)
3ம் இடம் : திரு இருதய ஆண்டவர் ஆலயம். கந்தளாய்

**பங்கு பற்றிய அனைவருக்கும் பாராட்டுக்களும் வாழ்த்துக்களும்**

## இளையோரே, இயேசுவின் இறையாட்சி கனவை நனவாகத் தயாரா?




திருஅவை மாறுவதற்கு இளையோர் உதவ முடியும் என ஆயர்கள் உண்மையிலேயே நம்புகின்றனரா என ஓர் இளையவர் கேள்வி எழுப்பினார். ஆயர்கள் இளையோருக்குச் செவிமடுத்து திருஅவையில் ஏதாவது மாற்றத்தைக் கொண்டு வர விருப்பமாய் இருந்தால், இளையோராகிய நீங்கள், இயேசுவுக்குச் செவிமடுத்து, உங்களை மாற்றுவதற்குத் தயாரா என்று இப்போது நான் கேட்கிறேன் எனக் கூறினார் திருத்தந்தை. இயேசுவை நம்புகின்றவர்களுக்கு வியத்தகு அனுபவங்களை அவர் கொடுக்கின்றார் எனவும் , விவிலியத்தை வாசிக்கவும். திருப்பலியில் பங்குபெறவும் இளையோருக்கு அழைப்பு விடுத்த திருத்தந்தை. இளம் வயதில் ஏராளமான கனவுகளுடன் வாழ்ந்த புனித பிரான்சிஸ் அசிசி, புனித தமியான் போன்றவர்கள் வாழ்வு பற்றியும் எடுத்துரைத்தார்.

வருகின்ற அக்டோபரில் இளையோர் பற்றி நடைபெறவிருக்கும் உலக ஆயர்கள் மாமன்றம் பற்றியும் கூறியத் திருத்தந்தை தனக்காக செபிக்க மறக்க வேண்டாம் எனவும் கேட்டுக் கொண்டார்.

ஆதாரம் : வத்திக்கான் வானொலி

## திருநற்கருணை மட்டுமே நம் இதயங்களைத் திருப்திபடும்



திருநற்கருணையில், இயேசு நமக்காக ஓர் இடத்தையும், உணவையும் தயார் செய்து வைத்திருக்கிறார். அதேநேரம் இயேசு தம் சீடர்களையும் தயார் செய்யுமாறு கூறுகிறார் என்றுரைத்த திருத்தந்தை, புறக்கணிப்பு மற்றும் ஏமாற்றுச் சுவர்களைத் தகர்த்தெறியுமாறு கேட்டுக் கொண்டார். இத்திருப்பலியின் பின்னர் ஏறக்குறைய ஒரு மைல் தூரத்திற்கு திருநற்கருணை பவனியையும் தலைமையேற்று நடத்தினார் திருத்தந்தை பிரான்சிஸ்.

1968ம் ஆண்டில் அருளாளர் திருத்தந்தை ஆறாம் பவுல் அவர்கள். கிறிஸ்துவின் திருஉடல் மற்றும் திருஇரத்தப் பெருவிழா திருப்பலியை ஓஸ்தியாவில் நிறைவேற்றியதற்குப் பின்னர், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் 2018ம் ஆண்டில் அங்கு நிறைவேற்றியுள்ளார்.

ஆதாரம் : வத்திக்கான் வானொலி

## திருநற்கருணையில் இயேசுவின் செயல்களின் நறுமணச்சுவை



திருநற்கருணை இயேசுவின் வார்த்தைகள் மற்றும் உயிர்ப்பின் சுவையையும் , அவரின் ஆவியின் நறுமணத்தையும் கொண்டுள்ளது. மெஜ்ஜிகோரே பங்குத்தள விசுவாசிகள் மற்றும் அங்கு திருப்பயணமாகச் செல்லும் விசுவாசிகள்மீது சிறப்பு கவனம் செலுத்தப்பட வேண்டுமென்ற நோக்கத்தில் ஆயர் Hoser அவர்களிடம் இப்பணி ஒப்படைக்கப்பட்டுள்ளது. முன்னாள் யுக்கோஸ்லாவிய பகுதியான போஸ்னியா-எர்செகொவினா குடியரசிலுள்ள மெஜ்ஜிகோரே நகரில் 1981ம் ஆண்டு ஜூன் 24ம் தேதியிலிருந்து அன்னை மரியா காட்சியளித்து வருகிறார் எனச் சொல்லப்படுகின்றது. ஏராளமான பக்தர்கள் திருப்பயணமாக அந்நகருக்குச் சென்று வருகின்றனர்.

ஆதாரம் : வத்திக்கான் வானொலி

## திகையாதே கலங்காதே

அஞ்சல் அலுவலன் நீட்டிய கடிதத்தைப் படித்ததும்
நெஞ்சமே வெடித்தது போன்ற துன்பம் அவளுக்கு
கொஞ்சி அவள் வளர்த்த மகன் இப்போது
கொஞ்சம் தொலைவிலுள்ள ஒரு ஊரில் பணி செய்தான்.
எஞ்சியுள்ள காலத்தை அவனோடு செலவிட எண்ணியிருந்தாள்.
வஞ்சம் அறியாத அவனுக்குப் பகைவர் பலர்.
கொஞ்சமும் இரக்கம் இல்லாத அவர்கள் அவனை
வஞ்சித்துக் கொன்றுவிட்டதாக அக்கடிதம் தெரிவித்தது.
அஞ்சினாள் அவள் அது உண்மையோ என்று,
கெஞ்சினாள் இயேசுவை அது பொய்யாகட்டும் என்று

கண்ணீர் பெருக்கி அவள் கதறத் தொடங்கினாள்.
பெண்ணின் கடுந்துயரத்தையும் அதன் காரணத்தையும்
வாய் திறந்து அவள் சொல்லாமலே அந்தோனியார்
தூய ஆவியால் அறிந்தார். அவர் அப்போது
ஆலயம் ஒன்றிலே மறையுரை ஆற்றிக்கொண்டிருந்தார்.
மேலான அன்புடன் அன்னையை நோக்கிச் சொன்னார்

'அம்மா, அழாதீர். உம் மகன் சாகவில்லை.
நிம்மதியாக இறைவாக்கினை நீர் கேட்கக் கூடாது என
இம்மாதிரியான சூழ்ச்சியைப் பேய் செய்கிறான்.
இடைவிடாது நம்மைக் காக்கும் இறைவனின் சொல்லைத்
தடைசெய்ய வேண்டும். மக்களின் கவனத்திற்கு
இடையூறு விளைவிக்க வேண்டும் என எண்ணித்தான்
மடையனான பேய் இவ்வாறு தந்திரம் செய்கிறான்.

கொண்டு வந்தவனும் பெரிய பொய்யன். அவன்
கொண்டுவந்த செய்திரும் பொய். அவனையோ
கொண்டு வந்த செய்தியையோ நம்ப வேண்டாம்
கண்டு கொள்ளுங்கள். ' அடியவர் தந்த உறுதியால்
அன்னையின் துன்பம் அகன்றது. இன்பம் பிறந்தது.
தன் கருத்தை நிறைவேற்ற அஞ்சல்காரனாக
அன்று பொய் வேடமிட்டு வந்த பேய்.
நன்மையே வடிவான அந்தோனியாரின் முன்பு
நின்று நிலைக்க முடியாமல் நாணி ஓடினான்.

அதே நேரத்தில் தான் நலமுடன் இருப்பதாக
அன்பு மகன் அனுப்பிய அஞ்சல் வந்தது.

## மன்னிப்பதில் சோர்வுறாத இறைவனுக்கு கதவுகளை திறந்து வையுங்கள்



இயேசுவின் அன்பை நாம் கண்டுகொள்ள வேண்டுமெனில் முதலில் நம் பாவங்கள் மன்னிக்கப்பட, நம்மையே நாம் திறந்தவர்களாக செயல்பட வேண்டும் என்ற அழைப்பையும் முன்வைத்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், நம் பாவங்கள் குறித்து நாம் வெட்கப்படுவதே முதல் படியாகும். ஆனால் இன்றைய உலகில் எது குறித்தும் வெட்கப்படாத ஒரு நிலையே பெரும் தீமையாக உள்ளது எனவும் கூறினார்.

ஆதாரம் : வத்திக்கான் வானொலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனிதங்கள் மலரவே
## கவிதைப்போட்டி முடிவுகள்

### சரியான கவிதை வரிகள்

அன்போடு வாழும் காலங்களாய்
அனைவரும் உணர்ந்து நடந்து செல்ல
இனிய நிலைகளும் காட்சிகளும்
எங்கும் பரந்து விரிந்திடவே
மனிதங்கள் மலர்ந்து இதயங்கள் மகிழ
உன்னத வாழ்வின் வடிவங்களாக
உயர்ந்து மேலோங்கி நின்று அவை
மனித மாண்பினைக் காட்டும் போது அது
மனிதமே மறையாத மகிமையின் சுடராகுமே

பங்குபற்றியவர்கள் ~ 13 பேர்
மிகச்சரியாக விடையளித்தோர் ~ 02 பேர்
பரிசுத்தொகை சமமாக வழங்கப்படும் 500/- ரூபா

### பரிசுக்குரியவர்கள்

1ம் பரிசு 500/- ரூபா
எஸ். ஜொனத்தனன்
பெரிய குளம்,
நிலாவெளி



500/- ரூபா
திரேசா சேவியர்
37/3, வித்தியாலயம் வீதி.
திருகோணமலை

## ஹாய் குட்டீஸ்
## திருவிவிலிய புதிர் போட்டி எண் ~ 36
## 2 குறிப்பேடு 25 ~ 36 அதிகாரங்கள்

01. ஆகாசின் ஆட்சிக்காலத்தில் இருந்த இறைவாக்கினர் யார்?
விடை :.......................................................................

02. எருசலேமில் கூடியிருந்த மக்கள் ......................................... திருவிழாவை மிகுந்த மகிழ்ச்சியோடு ........................................ நாள்கள் கொண்டாடினார்கள்.

03. எசேக்கியா கோவிலில் வேலைகளைச் செய்து முடித்த பின்பு இசைக்கருவிகளை வாசிக்க லேவியரை நியமித்தார். அங்கு லேவியரும், குருக்களும் பயன்படுத்திய இசைக்கருவிகள் யாது?
விடை :.......................................................................

04. மனாசே தன் மூதாதையருடன் துயில் கொண்டு எங்கே அடகம் செய்யப்பட்டார்?
விடை :.......................................................................

05.இதோ நான் ஆண்டவரின் இல்லத்தில் ......................................... கண்டெடுத்தேன்.

06. நாட்டில் நடக்கும் வியப்புக்குரிய நிகழ்ச்சிகள் பற்றி அறிந்துகொள்ள எங்கிருந்து? யார் வந்தனர்?
விடை :.......................................................................

07. எசேக்கியா யூதாவெங்கும் தம் கடவுளாம் ஆண்டவர் திருமுன் எப்படி ஒழுகினார்?
விடை :.......................................................................

08. அமட்சியா அரசனான போது அவனுக்கு வயது எத்தனை? அவர் எருசலேமில் எத்தனை ஆண்டுகள் ஆட்சி செய்தான்?
விடை :.......................................................................

09. நாடு ஓய்வு நாளைக் கடைபிடிக்காததால் ......................................... பாழாய்க் கிடக்கும்.

10. அரசன் உசியா இறக்கும்வரை எப்படி இருந்தான்?
விடை :.......................................................................

11. பாஸ்காப் பலிக்கென அரசன யோசியா தம் உடமையிலிருந்து எவற்றை மக்களுக்கு அளித்தார்?
விடை :.......................................................................

12. யோத்தாம் அம்மோனிய மன்னனுடன் போர்புரிந்து வெற்றி பெற்றதும் அம்மோனியர் அவனுக்கு எவற்றை அளித்தார்?
விடை :.......................................................................

பெயர் :.......................................................................
முகவரி :.......................................................................
பங்கு :.......................................................................

முடிவுத்திகதி 25.07.2018

## மறைக்கல்வி கற்போம் – 30

01. இயேசு தோற்றம் மாறும் போது அவருடன் இருந்த சீடர்கள் யார்?
பேதுருவும். யாக்கோபும். யோவானும்

02. திருச்சபை என்பது என்ன?
கிறிஸ்துவின் மறையுடல்

03. திருச்சபை என்பது ஒரு மதமா?
மதம் என்பது கடவுளையும் மனிதரையும் இணைக்கும் ஓர் அன்பின் சமூகமாகவும் வாழ்க்கை நெறியாகவும் இருக்கிறது

04. இயேசு திருச்சபையை ஏற்படுத்தியவரின் காரணம் என்ன?
1. அருள் அடையாளங்களை தக்கமுறையில் வழங்கவும்
2. தாம் வெளிப்படுத்திய உண்மைகளை போதித்து மக்களை ஆண்டு நடத்தவும்.
3. நற்செய்திகள் மூலம் கிறிஸ்துவுக்கு சாட்சி பகிரவும் இயேசு திருச்சபையை ஏற்படுத்தினார்.

05. இயேசு கூறிய அனைத்திலும் முதன்மையான கட்டளை எது?
நம் ஆண்டவராகிய கடவுள் ஒருவரே ஆண்டவரை உன் முழு இதயத்தோடும் முழு உள்ளத்தோடும் முழு ஆற்றலோடும் உன் ஆண்டவராகிய கடவுளிடம் அன்பு கூர்வாயாக.

06. ஆயர் திருப்பலி ஒப்புக் கொடுக்கும் போது பீடத்தில் எத்தனை விளக்குகள் எரிக்கப்படும்?
ஏழு (7)

07. பலிப்பீடம் எதைக் குறிக்கின்றது?
நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து நற்கருணையை உண்டாக்கி இராவுணவு மேசையையும் கல்வாரி மலையையும் குறிக்கின்ற காரணத்தால் இது உயிருள்ள கிறிஸ்துவை அடையாளப்படுத்துகின்றது.

08. இயேசு கூறிய இரண்டாவது கட்டளை எது?
'உன் மீது நீ அன்பு கூர்வது போல் உனக்கு அடுத்திருப்பவர் மீதும் அன்பு கூர்வாயாக'

09. கொதிராந்து என்பது என்ன?
தெனாரியத்தில் அறுபத்து நான்கில் ஒரு பகுதி

10. அற்புத பதக்கத்தின் செபம் என்ன?
' மாசில்லாமல் உற்பவித்த தேவ மாதாவே உமது வரப்பிரசாதங்களைக் கேட்கும் எங்களுக்காக மன்றாடும்'

## பொருள் புரிகிறதா?
## ஜூபிலிக் கொண்டாட்டம்

இன்று எங்கு பார்த்தாலும் ஜுபிலிகள்: வெள்ளிவிழா, பொன் விழா, வைர விழா, நூற்றாண்டு விழா என் பல ஜுபிலிகளுக்கான அறிவிப்புக்கள் நாள்தோறும் நமக்கு வந்து கொண்டிருக்கின்றன. பல்லாண்டுகள் பணி செய்த ஒருவரை அல்லது ஒரு நிறுவனத்தைப் பாராட்டிடுவதும் அவருக்கு அல்லது அதற்கு நன்றி கூறுவதும் முறையானதே. ஆனால் பல வேளைகளில் "ஜுபிலிகள்" முகப்புகழ்ச்சியை ஊக்குவிக்கின்றன. பெருந்தொகைகளை விரயமாக்குகின்றன. தனிநபர் விளம்பரமாக மாறுகின்றன.

### விவிலியத்தில் ஜூபிலி

"ஜுபிலி" என்பது ஒரு விவிலியக் கருத்து . லேவியர் 25ஆம் அதிகாரம் ஜுபிலி பற்றி விரிவாக் பேசுகிறது. விவிலியத்தில் ஜுபிலிகளுக்கும் தனிமனிதருக்கும் தொடர்பு இல்லை. தனி மனித வாழ்வின் குறிப்பிட்ட கட்டங்களில் கொண்டாடப்படும் ஒரு விழா அல்ல ஜுபிலி விழா! அது ஒரு சமுதாய விழா! சமதாய விடுதலை விழா!

ஜுபிலி என்ற சொல் "ஜோபேல்" என்னும் எபிரேயச் சொல்லிலிருந்து வருகிறது. அதன் பொருள் "வெள்ளாடு" என்பது. வெள்ளாட்டின் கொம்பினால் ஊதப்பட்டுத் தொடங்கப்படும் ஆண்டே ஜுபிலி ஆண்டு. இந்த ஜுபிலி ஆண்டு எழு ஓய்வு ஆண்டுகள் நிறைவேறிய பின்பு வருகின்ற ஐம்பதாம் ஆண்டின் ஏழாம் மாதத்தின் பத்தாம் நாளில் தொடங்கும். நாடெங்கும் எக்காளம் முழங்கி மக்கள் இவ்விழாவை ஆரம்பிப்பர். இது இறைவாக்கினர் நெகேமியா காலத்தில் ஆரம்பிக்கப்பட்டதென்பது பலரது கருத்து.

ஜுபிலி ணேடில் நடந்தத என்ன?
நிலம் பயிர் செய்யாது விடப்படும்
நிலம், வீடு போன்றவை விற்றவரிடமே மீண்டும் ஒப்படைக்கப்படும்.
கடன்கள் எல்லாம் தள்ளுபடி செய்யப்படும்: ஒவ்வொருவரும் தம் மரபுரிமைச் சொத்தை மீண்டும் கைக்கொள்வர். (25:10,13).
எல்லா அடிமைகளும் விடுதலை அடைவர் (25:54)

### ஏன் இவ்வாறு நடந்தது?

ஜுபிலி ஆண்டில் (ஓய்வு ஆண்டிலும்) நிலம் பயிர் செய்யாத விடப்படும். நிலம் இறைவனின் உரிமைச் சொத்து. 'நிலத்தை அறுதியாய் விற்றுவிட வேண்டாம். ஏனெனில் நிலம் என்னடையது" 25 : 23) என்கிறார் இறைவன். "ஐம்பதாம் ஆண்டு உங்களுக்கு ஜுபிலி ஆண்டு. இந்த ஆண்டு பயிரிட வேண்டாம். தானாய் விளைந்ததை அறுக்க வேண்டாம். கிளை நறுக்காத திராட்சைக் கொடியினின்று கனி சேர்க்கவும் வேண்டாம்" (23:11). இவ்வாறு நிலம் மனிதர்கள் பயன்படத்துவதற்காகக் கொடுக்கப்பட்டது. அத அவர்களது ஏகபோக உரிமை அல்ல. அதில் அவர்கள் விரும்புவதெல்லாம் செய்ய முடியாது. அதை அவர்கள் அழிக்கக் கூடாது, பாழ்படத்தக் கூடாது. மாறாகப் பண்படுத்த வேண்டும். எல்லாத் தலைமுறையினருக்கும் எனத் தரப்பட்ட நிலத்தைச் சூறையாடி. பிற்காலத் தலைமுறையினருக்குப் பயன்படா வண்ணம் ஆக்கிவிடக் கூடாது. சுற்றுப்புறச் சூழலுக்குக் கேடு விளைவித்துக் கடவுள் சோலைவனமாகத் தந்த நிலத்தை மனிதர்கள் பாலைவனம் ஆக்கக் கூடாது.

அத்துடன். இவ்வாறு ஓராண்டு நிலத்தில் பயிர் செய்யாது விடுவதால் இறைவன் நமக்கு உணவளிக்கக் கூடியவர் என்ற நம்பிக்கை பிறக்கும். நிலம் பல ஆண்டுகள் பலன் தந்ததற்காக வணக்கம். நன்றி. மகிழ்ச்சியைத் தெரிவிப்பதாக அமையும். அதேவேளையில். ஏழைகளும். நிலமற்றோரும் அவ்வாண்டில் தானே வளர்ந்த பலன்களைப் பெற்றக் கொள்ளவும். இஸ்ராயேலரின் குழந்தைகள் நாடோடிகள் போல் அவ்வாண்டு அலைந்து தம் மூதாதையர் நாடோடிகளாக வாழ்ந்ததையும், இறைவன் அவர்களுக்கு இந்த நிலத்தை தந்ததையும் நினைவுகூரவும் முடியும் என்றும் நம்பப்பட்டது.

தொடரும்..............................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விடுபட்ட எழுத்துப் புதிர் போட்டி– 28
### 2 கொரிந்தியர் அதிகாரம் 05 – 09 வரை

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| தி | ■ | இ | றை | ம | க் | க | ளி | ன் | ■ |
| ட | ■ | ம் | கு | க் | வி | ளை | வி | வை | சா |
| ந | ப | டை | க் | க | ல | ம் | ■ | ■ | ■ |
| ம் | ■ | ப | தி | ல | ளி | த் | தே | ன் | ■ |
| பி | தி | டு | | ச | ம | நி | லை | யி | ல் |
| க் | கு | பா | ல் | வி | ழ் | வா | ய | தூ | ■ |
| கை | ச் | ன் | ■ | நெ | ஞ் | சி | ல் | ■ | கை |
| ■ | ச | ட | ■ | ■ | சி | ட் | மா | ■ | யா |
| ■ | பை | உ | ■ | சு | ச் | மூ | ரு | பெ | ளு |
| வெ | ளி | த் | தோ | ற் | ற | த் | தை | ■ | ம் |

01. வெளித்தோற்றத்தை
02. படைக்கலம்
03. சாவை விளைவிக்கும்
04. கையாளும்
05. திடநம்பிக்கை
06. பெருமூச்சு
07. நெஞ்சு
08. பதிலளித்தேன்
09. தூய வாழ்வில்
10. சமநிலையில்
11. திருச்சபை
12. இறைமக்களின்
13. உடன்பாடு
14. மாட்சி

பங்குபற்றியோர் ~ 64 பேர்
சரியானவிடையளித்தோர் ~ 39 பேர்



### பரிசுக்குரியவர்கள்:-

| 1ம் பரிசு 500/= | 2ம் பரிசு 300/= | 3ம் பரிசு 200/= |
|---|---|---|
| திரு. அ. யேசுதாசன் இல. 676, அன்புவழிபுரம், திருகோணமலை | ஜனார்த்தனன் டெயிசிராணி மாங்காயூற்று, கன்னியா | செல்வி. சரணியா நேமிநாதன், 5ம் வட்டாரம், கும்புறுப்பிட்டி |

### பாராட்டுக்குரியவர்கள்

01. புஸ்பா சேவியர் ~ உவர்மலை
02. அ.கரோளினி கிறீப்திக்கா ~ பேராலயம்
03. ஏ.நிதர்சன் ~ இருதயபுரம்
04. அ.ஜெருஷா ~ பாலையூற்று
05. ச.ஏஞ்சல் ~ பாலையூற்று
06. எ.ற.வெரோணியஸ் ~ நிலாவெளி
07. சு.கௌசல்யா ~ பாலையூற்று
08. றொஜிலியோ இம்மானுவேல் ~ பேராலயம்
09. எல்.பீ.ஹர்சிக்கா ~ பாலையூற்று
10. ஆர்ஆர்.கிறிஸ்டபெல் ~ பேராலயம்
11. ஆர். எமில்ராஜ் ~ செல்வநாயகபுரம்
12. பீ. பெலிசியன் சேவியர் ~ பாலையூற்று
13. ஜெ. ஆன் டிலுசியா ~ உவர்மலை
14. எஸ். ராகுல் ~ பேராலயம்
15. அபிஷா கோகுல் ~ கும்புறுப்பிட்டி
16. இ.ஜொனத்தன் ~ பேராலயம்
17. நா. மெற்றில்டா ~ பாலையூற்று
18. செ. தஹாசிஹா ~ கன்னியா
19. சு.சுவேக்கா ~ பாலையூற்று
20. ஜீ.ஷெபானா ஆன் ~ கன்னியா
21. சு.குலரஜனி ~ பாலையூற்று
22. கு.தர்ஷினி ~ பாலையூற்று
23. ப.சேத்தன் ~ நிலாவெளி
24. ர.விக்ரோறியா ~ கன்னியா
25. இ.திலுக்சிக்கா ~ பாலையூற்று
26. டி. யோன்சன் ~ பேராலயம்
27. எட்மன் கேமியன் ~ நிலாவெளி
28. மி.பியரினா ~ பேராலயம்
29. வெ. ஆன் டிலக்ஷிக்கா ~ பேராலயம்
30. ஜெ. ஸ்டெபி ~ பேராலயம்
31. நிரஞ்சு சொயிபாலா ~ பாலையூற்று
32. காமலீற்றா விமலதாஸ் ~ பேராலயம்
33. ரஞ்சித்மேரி கில்டா ~ கன்னியா
34. செ. டிலூசிஹா ~ கன்னியா
35. வி. ஜனுக்சன் ~ இருதயபுரம்
36. எல்.எஸ். பியூரா ~ பேராலயம்

## சிறுவர்களுக்கான நிறம் தீட்டுதல் போட்டி முடிவுகள்

### உயிர்த்த ஆண்டவர்

1ம் பரிசு 500/-
கே.தவாணிக்கா.
இல 968.‘.1,
அந்தோனியார் வீதி.
பாலையூற்று,
திருகோணமலை

2ம் பரிசு 300/-
றொவினா றொஜிலியோ
இல: 52,
பாத்திமா வீதி,
திருகோணமலை

3ம் பரிசு 200/-
தே. செல்டன்
3ம் வட்டாரம்,
நிலாவெளி



பங்குபற்றிய அனைவருக்கும் வாழ்த்துக்களும், நன்றிகளும்.

## விடுபட்ட எழுத்துப் புதிர் போட்டி– 29
### 2 கொரிந்தியர் அதி 10 – 13 வரை

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஊ | | | | ■ | பா | | | | ■ |
| ■ | அ | | | | | | | | ■ |
| போ | ■ | க | | | | | | ■ | செ |
| | ■ | ■ | | | | | | நா | |
| | சூ | | | | | | ■ | ■ | |
| | ■ | | | | | | தீ | ■ | |
| | ■ | தொ | | | | | | ■ | ■ |
| ■ | சி | | | | | | | | |
| தூ | | | | | | ■ | து | | தீ |
| க | | | | | | | | | |

01. போ ........ ட்டம்
02. கற்பு.........ள க.....னியாக
03. தூய மு.......தம்
04. சிறந்....... பணி......ளனே
05. செ.......வம்
06. அவ.........டு வாழ்........ம்
07. க......... திற.........து
08. நா........பது அடி
09. பாராட்........
10. ஊதி..........ம்
11. தீ...........து
12. தொண்.........ர்.............ள்
13. சூழ்.......சி........ல்
14. தீ........ எதுவு.......

பெயர்:..................................................

முகவரி:..................................................

பங்கு:..................................................

முடிவுத்திகதி 25.07.2018

## சிறுவர்களுக்கான நிறம் தீட்டுதல் போட்டி

### ஞானப்பெற்றோர்

❖ பாலர் முதல் தரம் 5 வரையுள்ள மறைக்கல்வி மாணவர்களுக்கு.
❖ திருமலைத்தீபத்தில் தரப்படும் படத்திற்கு நிறம் தீட்டுதல் வேண்டும். போட்டோ பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.
❖ 1, 2, 3ம் இடங்களைப் பெறுபவர்களுக்கு பரிசுகள் வழங்கப்படும்
1ம் பரிசு - 500/= 2ம் பரிசு - 300/= 3ம் பரிசு - 200/=



பெயர் ..................................................

முகவரி ..................................................

பங்கு ..................................................

தரம் ..................................................

முடிவுத் திகதி 25.07.2018

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறைமாவட்ட விவிலிய அறிவுப்போட்டி மற்றும் பேச்சுப்போட்டி நிகழ்வுகள் - 2018




## குவாடலூப்பே திருத்தலத்தில் வணக்க மாத இறுதி நிகழ்வும், பங்குத்தந்தையின் 18வது குருத்துவ நிறைவு நிகழ்வும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடவுளே உமது பேரன்புக்கேற்ப எனக்கு இரங்கும். (தி.பா. 51:01)